தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்



**நாகபுரி,**

புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதற்கு தொழிற்சாலைகள் விவசாயிகளுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கேட்டுக் கொண்டார்.

மகாராஷ்டிர மாநிலம் நாகபுரியில் "க்ரிஷி வசந்த்-2014' என்ற தேசிய அளவிலான விவசாயக் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. மாநில ஆளுநர் கே.சங்கரநாராயணன் தலைமை வகித்தார். முதல்வர் பிரித்விராஜ் சவாண் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

**விழாவில் பிரணாப் முகர்ஜி பேசியதாவது:**

கடந்த 10 ஆண்டுகளில் நாம் பல்வேறு வகையான பயிர்களை உற்பத்தி செய்து மிகப் பெரிய சாதனையை படைத்துள்ளோம். வேளாண்மைத் துறை அமைச்சராக

இருந்து வரும் சரத் பவார், விவசாயத் துறையில் பல்வேறு புதிய வழிகளைக் காட்டியுள்ளார்.


உணவு தானியத்துக்காக எந்த வெளிநாட்டிடமும் இந்தியா ஒருபோதும் கையேந்தி நின்றது கிடையாது; மாறாக நமது சுய தேவையைப் பூர்த்தி செய்த பிறகு அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிலையிலேயே நம் நாடு உள்ளது.

புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு தொழிற்சாலைகளும், விவசாயிகளும் கைகோப்பதற்கு இதுவே சரியான தருணமாகும்.உலகிலேயே அரிசி ஏற்றுமதி செய்வதில் முதல் நாடாகவும், கோதுமை ஏற்றுமதி செய்வதில் 2-வது பெரிய நாடாகவும் இந்தியா திகழ்கிறது. பயறு வகைகளை ஏற்றுமதி செய்வதில் கூட நாம் பின்தங்கிய நிலையில் இல்லை.

நான் முன்பு மத்திய நிதியமைச்சராக இருந்தபோது, நம் நாட்டின் கிழக்கு மாநிலங்களில் நெல் பயிரிடுவதை ஊக்குவித்தேன். தற்போது அது லாபம் கொடுக்கத் தொடங்கியுள்ளது. இதன் பயனாக, நாட்டின் நெல் உற்பத்தியில் 51 சதவீதம் கிழக்கு மாநிலங்களான மேற்கு வங்கம், அஸ்ஸாம், ஜார்க்கண்ட், பிகார் மற்றும் உத்தரப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதிகளிலிருந்து கிடைத்து வருகிறது.

விவசாயத் துறைக்கு உதவும் வகையில் பயிர் ஆய்வு, பயிர்க்கடன் மற்றும் நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்துதல் போன்ற முக்கிய நடவடிக்கைகளை மத்திய அரசு தொடங்கியுள்ளது.மேலும், ரூ.7 லட்சம் கோடியை விவசாயிகளுக்கு கடனாக மத்திய அரசு வழங்கியுள்ளது என்றார் பிரணாப் முகர்ஜி.

## வரத்து அதிகரிப்பு: வெங்காயத்தின் விலை கடும் வீழ்ச்சி



**திருவள்ளூர்,**

தமிழகத்தில் வெங்காயத்தின் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த மாதம் வரை கிலோ ரூ.100 வரை விற்பனையான வெங்காயம், தற்போது கிலோ ரூ.15-க்கு விற்கப்படுகிறது.

கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஆந்திரம் மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்து தமிழகத்துக்கு வரும் வெங்காயத்தின் வரத்து மிகவும் குறைந்தது.

இதையொட்டி தமிழகத்தில் சிறிய வெங்காயம் கிலோ ரூ.80 வரையிலும், பெரிய வெங்காயம் கிலோ ரூ.100 வரையிலும் விற்பனை செய்யப்பட்டன.

இந்த விலை உயர்வு, நடுத்தர மற்றும் ஏழை மக்களை கடுமையாக பாதித்ததால் இதுகுறித்து அரசியலில் பரபரப்பாக பேசப்பட்டது.

அதே போல் தக்காளியின் விலையும் கிலோ ரூ.70 வரை விற்கப்பட்டதால் மக்கள் கடும் அவதிக்குள்ளாயினர்.

மேலும் வெங்காயம், தக்காளியின் விலை உயர்வால் தமிழகம் முழுவதும் உள்ள ஹோட்டல்கள் முதல் சாலையோர டிபன் கடைகள் வரை உணவுப்பொருள்களின் விலை உயர்ந்தன.

இதனைத்தொடர்ந்து மத்திய அரசு, வெளிநாடுகளிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்து நிலைமையை ஓரளவு சமாளித்தது.


ஆனால் தற்போது தமிழகத்தில் தக்காளி விளைச்சல் அதிகரித்ததாலும், வெளிமாநிலங்களில் இருந்து தக்காளி மற்றும் வெங்காய வரத்து அதிகமானதாலும் அவற்றின் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளன. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஆனால் ஹோட்டல்கள், சாலையோர டிபன் கடைகள் போன்றவற்றில் உணவுப்பொருள்களுக்கு விலைக் குறைப்பு செய்யப்படவில்லை.

இதற்கு தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காய்கறிகளின் விலை நிலவரம்: (ஒரு கிலோ) (பழைய விலை அடைப்புக்குறிக்குள்): வெங்காயம் சிறியது ரூ.10 (60), பெரியது ரூ.15 (100), நாட்டுத்தக்காளி கிலோ ரூ.5 முதல் 10 வரை, (30 முதல் 50 வரை) நவீன் தக்காளி ரூ.15 (40 முதல் 70 வரை), கத்திரி ரூ.8 (25), நூக்கல் ரூ.10 (20), கேரட் ரூ.8 (40), முள்ளங்கி ரூ.6 (15), அவரை ரூ.20 முதல் 30 வரை, (60), உருளை ரூ.12 (28), பாகற்க்காய் ரூ.20 (40), வெண்டை ரூ.12 (30), பெங்களூர் கத்திரி ரூ.8 (20), குடைமிளகாய் ரூ.20 (40), பீர்கங்காய் ரூ.16 (32), இஞ்சி ரூ.80, (100), கோஸ் ரூ.16 (30), பீன்ஸ் ரூ.48 (60), முருங்கை ரூ. 60 (80), பீட்ரூட் ரூ.16 (20), காளிஃபிளவர் சிறியது ரூ.10 முதல் பெரியது ரூ.40 வரையும் விற்பனை செய்யப்படுகின்றன.

## கடலூர் மாவட்டத்தில் ஹெலிகாப்டர் மூலம் நிலத்தடி நீர்மட்டம் ஆய்வு



**கடலூர்,**

நவீன கருவியை தூக்கிக் கொண்டு, வானில் பறந்தவாறு நிலத்தடி நீர் குறித்து ஆய்வு செய்த ஹெலிகாப்டர்.

கடலூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறித்து ஹெலிகாப்டர் மூலம் ஆய்வுப் பணி ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. மத்திய நீர்வள ஆய்வு அமைச்சகம்

சார்பில், டென்மார்க் நாட்டு உதவியுடன் இப்பணி, 24 நாள்கள் நடைபெற உள்ளது.

மத்திய நீர்வள ஆய்வு அமைச்சகம் மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன், தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள், நாட்டில் நிலத்தடி நீர் குறித்து ஆய்வு நடத்தி வருகின்றனர்.

டென்மார்க் நாட்டு உதவியுடன், இமாலயன் ஹெலி சர்வீஸ் நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவில் 6 இடங்களில் இந்த ஆய்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. பஞ்சாப், கர்நாடகம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மாநிலங்களில் ஏற்கெனவே ஆய்வு மேற்கொண்டு தகவல் சேகரிக்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழகத்தில் கடலூர் மாவட்டத்தில் ஆய்வுப் பணி ஞாயிற்றுக்கிழமை காலை தொடங்கியது. 24 நாள் நடைபெறவுள்ள இப்பணிக்குத் தேவையான டென்மார்க் நாட்டின் நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள், ஹெலிகாப்டர் ஆகியவை குறிஞ்சிப்பாடி பகுதிக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இதற்காக, குறிஞ்சிப்பாடியை அடுத்த பெத்தநாயக்கன்குப்பத்தில் தாற்காலிக ஹெலிபேடு அமைக்கப்பட்டுள்ளது.

கடலூர் முதுநகர் முதல் பெருமாள் ஏரிக்கரை, பரவனாற்றுப் படுகை, நெய்வேலியை ஒட்டியுள்ள பகுதி என 25 கிமீ சுற்றளவில் நிலத்தடி நீர்மட்ட ஆய்வு நடைபெற உள்ளது. ஹெலிகாப்டரில் பொருத்தப்பட்டுள்ள நிலத்தடி நீர் ஆய்வு செய்யும் கருவியைக் கொண்டு பறந்து சென்று ஆய்வு செய்து தகவல் சேகரித்து வரவுள்ளது.

கூண்டு போன்ற வளையத்தில் நவீனக் கருவிகள் பொருத்தப்பட்ட ஹெலிகாப்டர், மிகத் தாழ்வாக பறந்து ஆய்வு செய்ததை மக்கள் ஆர்வமுடன் பார்த்தனர்.

**கோதுமை, பருத்தி உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு**



**தாணே,**

கோதுமை மற்றும் பருத்தி உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைந்துள்ளதாக மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.

மகாராஷ்டிர மாநிலம், தாணேவில் உள்ள பால்கர் தாலுகாவில் சனிக்கிழமை மாலை நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு அவர் பேசியது:

5 ஆண்டுகளுக்கு முன்பு கோதுமை மற்றும் பருத்தியை இறக்குமதி செய்து கொண்டிருந்தோம். ஆனால் தற்போது அந்த நிலைமை மாறியுள்ளது. அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து ரூ.2.32 லட்சம் மதிப்புள்ள அன்னியச் செலாவணியை ஈட்டினோம்.

இந்தப் பயிர்களின் உற்பத்தியில் நாம் (இந்தியா) தன்னிறைவு அடைந்துள்ளதையே இது காட்டுகிறது என்றார் பவார்.

**கண்டலேறு அணையில் இருந்து ஒரு மாதத்தில் 650 மில்லியன் கன அடி மட்டுமே நீர் வரத்து:பொதுப்பணித்துறை அதிகாரிகள் தகவல்**

**திருவள்ளூர்,**

ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்துக்கு திறக்கப்பட்ட தண்ணீர் கடந்த ஒரு மாதத்தில் வெறும் 650 மில்லியன் கன அடி மட்டுமே நீர் வந்துள்ளதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னைக் குடிநீருக்கு திருவள்ளூர் மாவட்டத்தில் முக்கிய ஆதாரமாக விளங்குவது பூண்டி ஏரி. இந்த ஏரியில் சேமிக்கப்படும் தண்ணீர், இணைப்புக் கால்வாய்கள் வழியாக செம்பரம்பாக்கம், புழல், சோழவரம் ஆகிய ஏரிகளுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து அங்கிருந்து சென்னை குடிநீருக்காக பயன்படுத்தப்படுகிறது.இந்த நிலையில் மொத்தம் 3 ஆயிரத்து 231 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட பூண்டி ஏரியில், பருவ மழை பொய்த்தது, கடந்த ஆண்டு கண்டலேறு அணையில் இருந்து பெறப்படும் 10 டி.எம்.சி., தண்ணீர் முறையாக வராதது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வரலாறு காணாத அளவுக்கு வற்றியது. கடந்த மாதம் வரை 240 மில்லியன் கன் அடி தண்ணீர் மட்டுமே இருப்பு இருந்தது.

இந்த நிலையில் ஜனவரி 10-ம் தேதி ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து தமிழகத்துக்கு வினாடிக்கு 2 ஆயிரம் கன அடியாக தண்ணீர் திறக்கப்பட்டது. அதை தொடர்ந்து ஜனவரி 13-ம் தேதி 2 ஆயிரத்து 500 கன அடியாக உயர்த்தப்பட்டது. இதை தொடர்ந்து தெலுங்கு கங்கை கால்வாய் வழியாக பூண்டி ஏரிக்கு தண்ணீர் வரவில்லை. மிகவும் குறைவான அளவே தண்ணீர் வந்தது. இதனால் ஆந்திர மாநிலத்தில் வழியில் உள்ள விவசாயிகள் போர் போட்டு தண்ணீரை உறிஞ்சியிருக்கலாம் என அதிகாரிகள் கூறினர்.

தற்போது தெலுங்கு கங்கை கால்வாயில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி தமிழக எல்லையான ஜீரோ பாய்ன்டில் வினாடிக்கு 680 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது.

பூண்டி ஏரியில் ஞாயிற்றுக்கிழமை காலை வினாடிக்கு 572 கன அடி நீர் வரத்து உள்ளது. பூண்டி ஏரியில் 484 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. இங்கிருந்து செம்பரம்பாக்கம் மற்றும் புழல் ஏரிகளுக்கு வினாடிக்கு 210 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 10-ம் தேதி திறக்கப்பட்ட தண்ணீர் ஒரு மாதம் ஆன நிலையிலும் இதுவரை வெறும் 640 மில்லியன் கன அடி தண்ணீர் மட்டுமே வந்துள்ளது. ஒரு டி.எம்.சி., என்றால் ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீர். அதன்படி கணக்கிட்டால் ஆந்திர மாநிலத்தில் இருந்து இந்த ஆண்டு மேலும் 9.35

டி.எம்.சி., தண்ணீர் வரவேண்டியுள்ளது. இந்த தண்ணீர் வழியில் சேதாரமில்லாமல் முழுமையாக வந்தால் பூண்டி ஏரியில் பழைய படி நீர்மட்டம் முழு அளவை எட்டும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு தொழில்நுட்ப உற்பத்தி பயிற்சி**

**காஞ்சிபுரம்,**

வாலாஜாபாத் அருகே அவலூரில் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை சார்பில் நவீன தொழில்நுட்ப உற்பத்தி பெருக்கப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்ட தோட்டக் கலை சார்பில் விவசாயிகளுக்கு நவீன தொழில் நுட்ப உற்பத்தி பெருக்க பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது.

அந்த வகையில் வாலாஜாபாத் அருகே அவலூர் கிராமத்தில் கடந்த பிப்ரவரி 5, 6-ஆம் தேதிகளில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது.இதில் 40 தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் கலந்து கொண்டனர். மண் மாதிரி எடுக்கும் முறை, சொட்டுநீர்ப் பாசன நன்மைகள், பசுமை குடில், நிலப்போர்வை அமைத்து காய்கறி சாகுபடி செய்தல், துல்லியப் பண்ணையம் அமைத்தல் உள்ளிட்ட பயிற்சிகள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டன.இந்தப் பயிற்சி வகுப்பில் சிறப்பு விருந்தினர்களாக தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர்கள் வத்ஸ்வா, அனிலாகிங்ஸ்லி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வைகை அணையில் விதை உற்பத்தி பயிற்சி முகாம்**

**ஆண்டிபட்டி,**

: வைகை அணை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தில் விவசாயிகளுக்கான விதை உற்பத்தி பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு வேளாண்மை ஆராய்ச்சி மைய பேராசிரியர் பாலகிருஷ்ணன் விவசாயிகளுக்கு பசுந்தாள் உற்பத்தி குறித்து பயிற்சி அளித்தார். மேலும் விதை தொழில் நுட்ப பேராசிரியர் ரெங்கநாயகி பசுந்தாள் சாகுபடி குறித்தும் மற்றும் விதை உற்பத்தி குறித்து விளக்கினார். மேலும் பேராசிரியர்கள் சுரேஷ், ராஜேஷ் ஆகியோர் விவசாயிகளுக்கு வயல் வெளிகளில் நேரில் செயல்முறை செய்து

காட்டினர். இம்முகாமில் ரெங்க சமுத்திரத்தைச் சேர்ந்த 20-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு மக்காச்சோள சாகுபடி பயிற்சி**

**திருப்பத்தூர்,**

வேளாண்மைத்துறை உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பாக விவசாயிகளுக்கான வேளாண்மை பயிற்சி சனிக்கிழமை நடைபெற்றது.

திருப்பத்தூர் வட்டாரத்தில் மக்காச்சோளம் சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு சேவினிப்பட்டி பஞ்சாயத்து கல்லங்குத்து என்ற உட்கடை கிராமத்தில் மக்காச்சோளம் பெருக்குத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வெள்ளி, சனி இரண்டு நாள்கள் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக்கு திருப்பத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சி.கே.சர்மிளா தலைமை வகித்து மக்காச்சோளம் சாகுபடி பரப்பினை அதிகப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும், சாகுபடி தொழில் நுட்பங்களையும் எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் முத்துமீனா, துணை வேளாண்மை அலுவலர் தனசேகரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் இமான்ஜாபர், ஜோதிராஜா, மற்றும் அட்மாதிட்ட தொழில்நுட்ப மேலாளர் தங்கபாண்டி ஆகியோர் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு விதை நேர்த்தி மற்றும் பயிர் பாதுகாப்பு தொடர்பான செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப் பட்டன. விவசாயிகளுக்கு உழவர் ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு காய்கறி சாகுபடி பயிற்சி**

**பரமக்குடி,**

நயினார்கோவில் ஒன்றியம் ராதாப்புளி, கீழக்காவனூர், தறிகொம்பன் மற்றும் கல்வெளிப்பொட்டல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் மிளகாய்- காய்கறி சாகுபடி செய்யும் சிறப்புப் பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமை பரமக்குடி உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் எஸ்.எம். உதுமான் தலைமை வகித்து துவக்கி வைத்தார். மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் ராஜகோபால் பயிற்சியின் நோக்கம், வறட்சியான சூழலில் பயிர்களை பராமரிப்பது குறித்தும், மிளகாய் வற்றலை லாபகரமாக சந்தைப்படுத்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை அணுகுவது குறித்தும் விளக்கினார்.

தோட்டக்கலை உதவி இயக்குநர் ர. சேகர் மிளகாய் மற்றும் காய்கறி பயிர்களுக்கு உரமிடுதல் குறித்து விளக்கமளித்தார். பூச்சிநோய் மேலாண்மை என்ற தலைப்பில் நயினார் கோவில் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மனோகரன் பேசினார்.

இப் பயிற்சியில் 25 விவசாயிகள் கலந்துகொண்டனர். பயிற்சி ஏற்பாட்டினை தோட்டக்கலை அலுவலர்கள் வ. நமச்சிவாயம், உதவி வேளாண்மை அலுவலர் இ. நாகராஜன் மற்றும் அட்மா திட்ட தொழில் நுட்ப அலுவலர்கள் செய்திருந்தனர்.

**தண்டனை பெற்று மனம் திருந்திய 16 குடும்பத்தினருக்கு இலவச மாடுகள்**

**மேட்டுப்பாளையம்,**

சிறுமுகை பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதை தொழிலாகக் கொண்டு தண்டனை பெற்று, மனம் திருந்தி வாழ்பவர்களுக்கு தமிழக அரசு சார்பில் இலவச கறவை மாடுகள் வழங்கும் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது.

மேட்டுப்பாளையம் அருகிலுள்ள ஆனைப்பள்ளி புதூரில் கடந்த காலங்களில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதைத் தொழிலாகக் கொண்டு பல குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. தமிழக அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டதில், இப்பகுதியில் கள்ளச் சாராயம் முற்றிலும் ஒழிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையால் பலர் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

சிறைவாசம் சென்றவர்கள் மீண்டும் பழைய தொழிலில் ஈடுபடாமல் தடுக்க, மனம் திருந்திய குடும்பத்தினருக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி, மேட்டுப்பாளையத்தை அடுத்த பள்ளேபாளையம் அரசு நடுநிலைப் பள்ளியில் சனிக்கிழமை நடைபெற்றது.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமை வகித்தார். தொகுதி எம்எல்ஏ ஓ.கே சின்னராஜ் முன்னிலை வகிக்க, துணை ஆட்சியர் சாந்தி வரவேற்றார். இதில் முதல்கட்டமாக 16 குடும்பத்தினருக்கு தலா ரூ. 30 ஆயிரம் மதிப்புள்ள இலவச கறவை மாடுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் ஞானசேகரன், காரமடை ஒன்றியத் தலைவர் ராஜ்குமார், மாவட்ட கவுன்சிலர் சிவசாமி,

ஊராட்சித் தலைவர் ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு விருது**

**தாராபுரம்,**

ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியம் சார்பில், சிறந்த பால் உற்பத்தியாளர்களுக்கு விருது வழங்கும் விழா தாராபுரத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவிற்கு, ஆவின் தலைவர் பி.சி.ராமசாமி தலைமை வகித்தார். இயக்குநர் ராஜ் முன்னிலை வகித்தார்.பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதுடன், சிறந்த தரமான பால் வழங்கும் சங்கங்களை ஊக்கப்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்த விழாவில், அதிகளவில் பால் உற்பத்தி செய்தமைக்காக நஞ்சியம்பாளையம் மற்றும் கொளத்துப்பாளையம் சங்கங்களுக்கு நட்சத்திர அந்தஸ்து விருதை ஆவின் தலைவர் பி.சி.ராமசாமி வழங்கினார். மேலும், சிறந்த முறையில் பால் உற்பத்தி செய்த 66 உறுப்பினர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்பட்டன.

விழாவில், முன்னாள் அமைச்சர் கே.வி.ராமலிங்கம், எம்எல்ஏ கே.பொன்னுச்சாமி, ஆவின் இயக்குநர் ரத்தினசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**ரூ. 10 லட்சத்துக்கு கொப்பரைத் தேங்காய் ஏலம்**

**கோபி,**

கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 10 லட்சத்துக்கு கொப்பரைத் தேங்காய் ஏலம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இங்கு வாரம் தோறும் வியாழக்கிழமை கொப்பரைத் தேங்காய் ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்திற்கு, கோபிசெட்டிபாளையம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து 82 விவசாயிகள், 335 மூட்டைகளில் கொப்பரைத் தேங்காய்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.கொப்பரை தேங்காய் குறைந்தபட்ச விலையாக குவிண்டால் ரூ.7,539-க்கும், அதிகபட்ச விலையாக ரூ.7,773-க்கும் விற்பனை ஆனது. சராசரி விலையாக ஒரு குவிண்டால் ரூ.7 ஆயிரத்து 609-க்கு விற்பனை செய்யப்பட்டது.  இதில், மொத்தம் ரூ. 10 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது. கொப்பரைத் தேங்காய்களை காங்கயம், ஊத்துக்குளி, பெருந்துறை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.  கடந்த சில வாரங்களாக கொப்பரை தேங்காயின் விலை தொடர்ந்து அதிகரித்து வந்த நிலையில், இந்த வாரம் குவிண்டாலுக்கு ரூ. 300 வரை விலை குறைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**பவானிசாகர் நீர்மட்டம் 41.90 அடி**

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 41.90 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 884 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றிலும், வாய்க்காலிலும் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.7 டி.எம்.சி.

**தானிய சேமிப்பு தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

**ஆற்காடு,**

தானிய சேமிப்பு தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு திமிரியில் இரண்டு நாள்கள் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

மத்திய அரசின் உணவு நுகர்வோர் விவகாரம் மற்றும் பொது விநியோகத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் சேமிப்புக் கிடங்கு நிறுவனம் சார்பில் திமிரி  வேளாண்மை உதவி இயக்குநர் சிவசங்கர் சிங் தலைமையில்

நடைபெற்ற பயிற்சி முகாமில் சென்னை மத்திய சேமிப்பு கிடங்கின் மேலாளர் நற்றமிழ் முன்னிலை வகித்தார்.

இதில் மண்டல முதுநிலை உதவி மேலாளர் மரியதாஸ், சேமிப்புக் கிடங்கின் அவசியம் குறித்தும், சேமிப்பு கிடங்கின் ரசீதுகளை வங்கியில் அடகு வைத்து கடன் பெறுவது குறித்தும் பேசினார். மண்டல மேலாளர் அ.தி.சங்கர் பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ், விலையில்லா உலோக குதிர்களை வழங்கினார்.

**தேசிய வேளாண்மை காணொளி கண்காட்சி**

**போளூர்,**

போளூர், சேத்துப்பட்டில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு தேசிய வேளாண்மை நேரடி காணொளி காட்சி ஞாற்றுக்கிழமை காண்பிக்கப்பட்டது.

இந்தியாவில் 50 ஆண்டுகளுக்கு முன்பு தேசிய வேளாண்மை கண்காட்சி நடைபெற்றது. இதேபோன்ற தேசிய வேளாண்மை கண்காட்சி நாக்பூரில் பிப்ரவரி 9 முதல் பிப்ரவரி 13 வரை 5 நாள்கள் நடைபெறுகிறது.

இதில் வேளாண்மைத்துறை சார்ந்த வேளாண்மை, தோட்டக்கலை, பட்டு வளர்ச்சி, வேளாண்மை பொறியியல் என வேளாண்மைத் துறை சார்ந்த 737 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த தேசிய வேளாண்மைக் கண்காட்சியில் வேளாண்மை மற்றும் வேளாண்மை குறித்த தொழில்நுட்பங்கள், செயல் விளக்கங்கள், புதிய வகையான வேளாண்மை பொருள்கள், நவீன வகை விவசாய பொருள்கள், இடுபொருள்கள் விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இந்த தேசிய வேளாண்மை கண்காட்சியை போளூர், சேத்துப்பட்டில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு தேசிய வேளாண்மை நேரடி காணொளி காட்சி அமைக்கப்பட்டு காண்பிக்கப்பட்டது. இந்த நேரடி காணொளி காட்சியை வேளாண்மை துணை இயக்குநர் சந்திரசேகரன் (உழவர் பயிற்சி), அட்மா திட்ட துணை இயக்குநர் சுந்தரம் ஆகியோர் பார்வையிட்டனர்.

வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணகி (போளூர்), வடமலை (சேத்துப்பட்டு)ஆகியோர் காணொளி காட்சியை ஏற்பாடு செய்திருந்தனர். வேளாண்மை அலுவலர்கள் அகிலாதேவி, சித்ரா, வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் சுகுமார், உதவி வேளாண்மை அலுவலர் கம்பைசிவம், தொழில்நுட்ப வல்லுநர்கள் வாரபாண்டியன், ராஜ்குமார், விரிவாக்க உதவியாளர் ஏழுமலை ஆகியோர் உடனிருந்தனர். இந்த தேசிய வேளாண்மை நேரடி காணொளி காட்சியை ஏராளமான விவசாயிகள் பார்த்தனர்.

**வேளாண்மைத் துறை சார்பில் விவசாயிகளுக்குப் பயிற்சி**

**செங்கம்,**

செங்கம் வேளாண்மைத் துறை சார்பில் விவசாயிகளுக்கான ஒருநாள் பயிற்சி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

செங்கம் வேளாண்மைத்துறை மூலம் செங்கம் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு நடவு துவரை நுண்ணீர் பாசனம் குறித்து விவசாயிகளுக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. முகாமுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் சிவக்குமார் தலைமை வகித்தார். துணை வேளாண்மை அலுவலர் ஜெயசீலன் வரவேற்றார். செங்கம் ஒன்றியக் குழுத் தலைவர் எம்.கணேசன் கலந்துகொண்டு பயிற்சி முகாமை துவக்கிவைத்துப் பேசினார். அதைத்தொடர்ந்து விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், நடவு துவரை நுண்ணீர் பாசனம் குறித்தும் வேளாண்மை உதவி இயக்குநர் சிவக்குமார் பயிற்சி அளித்தார்.

உடன் வேளாண்மை அலுவலர்கள் சரவணன், குமார், ராமஜெயம், சங்கர், கலைமணி, அட்மா திட்ட வட்டார மேலாளர் ராமமூர்த்தி, விவசாயி அண்ணாமலை உள்பட விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

**பாலேகுளி, விரும்பம்பட்டி ஏரிகளிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி மாவட்டம், பாலேகுளி, விரும்பம்பட்டி ஏரிகளிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீரை மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார்.

கிருஷ்ணகிரி அணையின் இடதுபுறக் கால்வாயை நீட்டிப்பு செய்து, பாலேகுளி ஏரியில் இருந்து சந்தூர் வரை உள்ள 28 ஏரிகளின் கீழ் உள்ள 334 ஹெக்டேர் பரப்பளவு நிலமும், பாரூர் ஏரியின் கிழக்குப் பிரதான கால்வாயின் விருப்பம்பட்டி ஏரியிலிருந்து பாலேதோட்டம் ஏரி உள்பட 4 ஏரிகள் மூலம் 83.76 ஹெக்டேர் பரப்பளவு விவசாய நிலமும் பயனடையும் வகையில், ரூ.8.25 கோடி மதிப்பில் புதிய கால்வாய் அமைக்கும் பணி நிறைவு பெற்றது.

இதன்படி, இந்தக் கால்வாய்களில் பாசன நீரை மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் திறந்து வைத்தார்.

அப்போது மாவட்ட வருவாய் அலுவலர் ப.பாலசுப்பிரமணியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் கே.அசோக்குமார், எம்எல்ஏ-க்கள் மனோரஞ்சிதம் நாகராஜ், கே.இ.கிருஷ்ணமூர்த்தி, தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.தென்னரசு, பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் ஜகந்நாதன், உதவிச் செயற்பொறியாளர் குமார், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் சி.பெருமாள், கே.டி.சாந்தி தூயமணி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செயல் விளக்கம்**

**ஆலங்குடி,**

ஆலங்குடி அருகே வேளாண் துறை சார்பில் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கப் பயிற்சி சனிக்கிழமை நடைபெற்றது.

திருவரங்குளம் குருந்தடிமனை கிராமத்தில் புஷ்பம் என்பவரது வயலில் நடைபெற்ற செயல்விளக்க நிகழ்ச்சிக்கு வேளாண்மை துணை இயக்குநர்

சதானந்தம் தலைமை வகித்தார். திருவரங்குளம் வேளாண்மை உதவி இயக்குநர் சிவக்குமார் வரவேற்றார். வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முனைவர் பசுபதி, நிலக்கடலை பயிரைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களின் அறிகுறிகள் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றி வயல்வெளியில் பயிற்சி அளித்தார்.

வேளாண்மை அலுவலர் ஜெகதீஸ்வரி வேம்பு சார்ந்த பூச்சிக் கொல்லிகளின் உபயோகம் பற்றி கூறினார். வேம்பு சார்ந்த பூச்சிக்கொல்லி மருந்துகள் முழுமானியத்தில் வழங்கப்பட்டது.

வேளாண்மை அலுவலர் அன்பரசன் நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை சத்யா, "அட்மா' தொழில்நுட்ப அலுவலர் பாண்டியன் மற்றும் உழவர் பயிற்சி நிலைய அமைப்பாளர் செல்வி ஆகியோர் செய்திருந்தனர். இதில், சுமார் 30 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு பயிர் விளைச்சல் போட்டி**

**ஒரத்தநாடு,**

ஒரத்தநாடு வட்டாரத்தில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், தற்சமயம் பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்பட்டு வருவதாக ஒரத்தநாடு வேளாண் உதவி இயக்குநர் பாலசரஸ்வதி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தெரிவித்துள்ளது: அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் பயிர் விளைச்சல் போட்டி வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் வேளாண்மைத் துறை மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இந்த போட்டி ஒரத்தநாடு வட்டாரத்திலும் நடத்தப்படுகிறது. இதில் அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகள், போட்டியில் பங்கேற்க ஆர்வம் உள்ளவர்கள் கலந்துகொள்ளலாம்.

நடவு முடிந்த விவசாயிகள், போட்டியில் பங்கேற்பதற்கான நுழைவுக் கட்டணத்தை வேளாண் கிடங்கில் செலுத்த வேண்டும். உத்தேச அறுவடை தேதியிடப்பட்டு விண்ணப்பம் வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்படும்.

பிறகு அறுவடை தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு பயிர் விளைச்சல் போட்டி நடுவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவர்களது முன்னிலையில் போட்டி நடைபெறும்.

நிகழ்ச்சியில், அதிக மகசூல் எடுக்கும் விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் வேளாண் இயக்குநரால் பரிசு வழங்கப்படும் என்றார் அவர்.

ஆய்வு: ஒரத்தநாடு வட்டாரம் புலவன்காடு கிராமத்தைச் சேர்ந்த மாரியப்பன் வயலில் கோடை நெல் சாகுபடியை வேளாண் இணை இயக்குநர் சேகர் அண்மையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, விவசாயிகளுக்கு இடுபொருள்களை உடனுக்குடன் வழங்க வேண்டும் என வேளாண் அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது, வேளாண் துணை இயக்குநர் சீனிவாசன், ஒரத்தநாடு வேளாண் உதவி இயக்குநர் பாலசரஸ்வதி, வேளாண் அலுவலர் வெங்கடாச்சலம்,

உதவி வேளாண் அலுவலர் ராபர்ட் ஜான்சன் ஆகியோர் உடனிருந்தனர்.

**தஞ்சையில் பிப். 14-ல்உணவு பதப்படுத்துதல் கருத்தரங்கம்**

**தஞ்சாவூர்,**

தஞ்சாவூரில் புதுக்கோட்டை சாலையில் உள்ள ரோட்டரி அரங்கத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் உணவுப் பதப்படுத்துதல் குறித்த ஒருநாள் விழிப்புணர்வுக் கருத்தரங்கம் பிப். 14-ம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) ஆர். கலியராஜ் தெரிவித்திருப்பது:

இந்தக் கருத்தரங்கம் பிப். 14-ம் தேதி காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறும். இதில், தேசிய உணவுப் பதப்படுத்துதல் இயக்கத்தின் கீழ்

செயல்படும் பல்வேறு மானியத் திட்டங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்படும். நெல், உளுந்து, பயறு, எண்ணெய் வித்துகள், பால், இறைச்சி, மீன் ஆகியவை பதப்படுத்தும் சிறு தொழில்கள் தொடங்க ஆர்வமுள்ள தொழில்முனைவோர், ஏற்கெனவே உணவுப் பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

இதில், கலந்து கொள்ள

ஆர்வமுள்ள தொழில்முனைவோர் வேளாண் துணை இயக்குநர் (வேளாண் வணிகம்), நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர் (04362 - 256628, 94424 03857) என்ற முகவரியில் நேரில் சென்று முன் பதிவு செய்து கொள்ளலாம். முன் பதிவு செய்பவர்களுக்கு

மட்டுமே முன்னுரிமை வழங்கப்படும்.

**நெல் கொள்முதல் நிலைய பணியாளர்கள் மீது புகார் வந்தால் நடவடிக்கை**

**தஞ்சாவூர்,**

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் முறைகேடுகள் நடைபெறுவதாக விவசாயிகளிடமிருந்து புகார்கள் வந்தால் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன்.

தஞ்சாவூர் மாவட்டம், மாரியம்மன் கோவில் குளிச்சப்பட்டு, வளமரக்கோட்டை மற்றும் காட்டுர் ஊராட்சிகளில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் சனிக்கிழமை ஆய்வு செய்தார். இதன்பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் 402 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் விவசாயிகள் அறுவடை செய்த நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை மாவட்டத்தில் 1 லட்சத்து 44 ஆயிரத்து 776 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நெல் வந்தவுடன் எந்தவித தாமதமின்றி கொள்முதல் செய்வதோடு உடனடியாக அவர்கள் விருப்பப்படும் வகையில் ரொக்கமோ வங்கிகளின் மூலமாகவோ பணம் பட்டுவாடா செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளிடமிருந்து புகார்கள் வந்தால் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க விஜிலென்ஸ் கண்காணிப்பு குழு தொடர்ந்து பணியில் ஈடுபட்டுள்ளது என்றார். ஆய்வின் போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக உதவி மேலாளர்கள் எம். நாகராஜன், முருகேசன் ஆகியோர் உடனிருந்தனர்.

**நாகூர் மீன்பிடித் துறைமுகத்தில் ஆய்வு**

**நாகப்பட்டினம்,**

நாகை மாவட்டம், நாகூர் மீன்பிடித் துறைமுகத்தில் ரூ. 10.6 கோடியில் நடைபெறும் மீன் இறங்குதளம் அமைக்கும் பணி, புதிய கட்டுமானப் பணிகள், வெட்டாற்று தூர்வாரும் பணி, முகத்துவாரம் அமைக்கும் பணிகளை அமைச்சர் கே.ஏ. ஜெயபால் சனிக்கிழமை ஆய்வு செய்தார்.

அப்போது கட்டுமானப் பணிகள், வெட்டாறு தூர்வாரும் பணி, முகத்துவாரம் அமைக்கும் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.முகத்துவாரப் பணிகள் நிறைவடைந்திருப்பதையொட்டி, மீனவர்களின் மீன்பிடிப்புப் பயன்பாட்டுக்காக உடனடியாக முகத்துவாரத்தை திறந்துவிட வேண்டும் என்றார் அமைச்சர்.

மீன்வளத் துறை செயற்பொறியாளர் ஆர். அண்ணாமலை, உதவி செயற்பொறியாளர் எம்.ஆர். சுகுமார், உதவி செயற்பொறியாளர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, குத்தாலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் என். தமிழரசன், நகர்மன்றத் துணைத் தலைவர் சுல்தான் அப்துல்காதர், நகர்மன்ற உறுப்பினர் ஆர். சந்திரமோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கு மானியத்தில் இறால் குஞ்சு**

**காரைக்கால்,**

புதிய ரகமான வெணாமி என்கிற இறால் குஞ்சுகள், காரைக்கால் பகுதி விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண் அறிவியல் நிலையம் சனிக்கிழமை அளித்தது.

அறிவியல் நிலையத்தின் மீன்வளப் பிரிவு சார்பில் பல்வேறு வகையான மீன், இறால் வகைகள் நிலைய குட்டைகளில் வளர்க்கப்படுகிறது. குட்டைகள் வைத்திருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, இறால், மீன் வளர்ப்பு குறித்து பயிற்சி, நேரடி விளக்கம் அளிக்கப்படுகிறது.

புதிய ரகமான வெணாமி என்கிற இறால் குஞ்சுகள் வரவழைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு மானிய விலையில் சனிக்கிழமை வழங்கப்பட்டது. வேளாண் அறிவியல் நிலைய தலைவர் ஆ. சுரேஷ் பேசினார்.

தமிழகம் உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து புதிதாக கலப்பின முறையில் உற்பத்தி செய்யப்பட்ட இறால், மீன் குஞ்சுகள் வாங்கிவரப்பட்டு நிலையத்தில் வளர்க்கப்படுகிறது. இப்போது வெணாமி என்கிற புதிய ரக ஒரு லட்சம் இறால் குஞ்சுகள் வாங்கிவரப்பட்டு, நிலைய குட்டையில் விடப்பட்டுள்ளன. இது 6 முதல் 8 மாதங்களில் அறுவடைக்கு தயாராகக் கூடியவை. இறால் கிலோ ரூ. 200-க்கும் அதிகமான விலையில் ஏற்றுமதி செய்ய முடியும். புதிய ரக இறால், மீன்களுக்கு வெளிமாநிலங்களில் மக்களிடையே நல்ல வரவேற்பு இருக்கிறது. இறால், மீன் வளர்ப்புகளுக்குத் தேவையான தீவணம் உள்ளூரிலேயே கிடைக்கிறது. நிலையத்தில் விவசாயிகளுக்கு இறால், மீன் வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிலைய வல்லுநர்கள் தீர்த்துவைக்கின்றனர். இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு, சுய வருவாயைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் நிலைய முதல்வர் ந. ராஜேந்திரன், மீன்வள தொழில்நுட்ப வல்லுநர் கோ. விஜயக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**இலையுதிர்வு காலம்: ரப்பர் மரங்களில் பால் வடிப்பு நிறுத்தம்**

**குலசேகரம்,**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்களில் இலையுதிர்வு காரணமாக ரப்பர் பால் வடிப்பு நிறுத்தப்படுகிறது.

ரப்பர் தோட்டங்களில், மரங்களிலிருந்து பால் வடித்தல், களப்பணி, ஆலைப் பணி, ரப்பரை தரம்பிரித்து கட்டுகளாக தயார் செய்தல் என பல்வேறு பணிகள் அடங்கியுள்ளன. மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்கள் அமைந்துள்ள மலையோரப் பகுதிகள் மட்டுமன்றி இதரப் பகுதிகளிலும் பொருளாதார தன்மையை தீர்மானிப்பதில் ரப்பருக்கு முக்கியப் பங்கு உண்டு.

பால்வெட்டு நிறுத்தம்: ஆண்டுதோறும் குளிர்காலமான டிசம்பர்-ஜனவரி மாதங்களில் ரப்பர் மரங்கள் இயல்பாக இலைகளை உதிர்க்கும். பின்னர், பிப்ரவரி இறுதியில் புதிய இலைகள்  துளிர்க்கும். இலையுதிர் காலங்களில் ரப்பர் பால் உற்பத்தி குறைவாக இருப்பதாலும், ரப்பர் மரங்களுக்கு ஓய்வு கொடுக்கும் வகையிலும் ரப்பர் பால்வடிப்பு நிறுத்தப்படும்.

இதன்படி மாவட்டத்தில் தற்போது சிறு தோட்டங்கள் முதல் பெருந்தோட்டங்கள் வரை இம்மாதம் தொடக்கம் முதலே ரப்பர் பால்வடிப்பு நிறுத்தப்பட்டு வருகின்றன.

பிரதான அரசுத் தோட்டமான அரசு ரப்பர் கழகத்தில் இம்மாதம் 15 ஆம் தேதி பால்வடிப்பு நிறுத்தப்படுகிறது. ரப்பர் பால்வெட்டு நிறுத்தப்படுவதால் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு வருவாய் பாதிப்பு ஏற்படும்.

விலை வீழ்ச்சியும், வருவாய் இழப்பும்: ரப்பருக்கான விலை மிகவும் குறைவாக இருந்ததால் ரப்பர் விவசாயிகளுக்கு கடந்த ஆண்டு மிகவும் நெருக்கடியான நிலையே இருந்தது. இதனால் தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. தொடர்ந்து விலை குறைவாக இருக்கும் நிலையில், பால்வடிப்பு காலத்திலும் ஊதியங்களை உயர்த்தி வழங்குவதில் சிக்கல்கள் ஏற்படக்கூடும் எனக் கூறப்படுகிறது.

முடிவுக்கு வராத தொழிலாளர் போராட்டம்: சிறு ரப்பர் தோட்டங்கள் மற்றும் அரசு ரப்பர் கழகத்தில் பால்வடிப்பு நிறுத்தப்படும் நிலையில், இதர பெரும் தனியார் தோட்டங்களில் ஊதிய உயர்வு கேட்டு தொழிலாளர்கள் கடந்த இரு மாதங்களுக்கும் மேலாக நடத்தும் வேலைநிறுத்தம் முடிவுக்கு வராமலேயே பால்வடிப்பு காலம் நிறைவடைகிறது.

இதுகுறித்து குமரி மாவட்ட சிஐடியூ தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலர் எம். வல்சகுமார் கூறியதாவது:

ஒவ்வொரு ஆண்டும் இலையுதிர் காலங்களில் பால்வடிப்பு நிறுத்தப்பட்டு பின்னர், ஏப்ரல் அல்லது மழையின் வரவைப் பொறுத்து பால்வடிப்பு மீண்டும் தொடங்கும். பால்வடிப்பு நிறுத்தப்படும் காலங்களில் தொழிலாளர்கள் வருவாய் இன்றி தவிக்கும் நிலை தொடர்கிறது. இக்காலத்தில் தொழிலாளர்களுக்கு முன்பணம் குறிப்பிட்ட சில தோட்ட நிர்வாகங்கள் மட்டுமே வழங்கி வருகின்றன. சிறு தோட்டங்களில் முன்பணம் கொடுப்பதில்லை.

பெரும் தனியார் ரப்பர் தோட்டங்களில் ஊதிய உயர்வு கேட்டு வேலைநிறுத்தம் நடைபெற்று வருகிறது. தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்று கடந்த 110 நாள்களாக நடக்கும் இந்த வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு தோட்ட நிர்வாகங்கள் முன்வரவில்லை. இதேபோன்று பெரும் தனியார் தோட்டம் ஒன்றில் தொழிலாளர்களுக்கான உயர் சிகிச்சைக் கேட்டு 200 நாள்களுக்கும் மேலாக வேலைநிறுத்தம் நடைபெற்று வருகிறது.

இப்போராட்டங்களை முடிவுக்கு கொண்டு வர முதல்வர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

**வேளாண்மை பொறியியல் சேவை மைய தொழிற்கூடம் திறப்பு**

**திருநெல்வேலி,**

திருநெல்வேலி புதிய பஸ் நிலையம் அருகேயுள்ள வேளாண்மை பொறியியல் சேவை மையத்தில் பொலிவூட்டப்பட்ட கட்டடம் மற்றும் தொழிற்கூட திறப்பு விழா நடைபெற்றது.

பொலிவூட்டப்பட்ட கட்டடத்தை, தமிழக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி. செந்தூர்பாண்டியன் திறந்து வைத்தார். தொழிற்கூடத்தை முத்துகருப்பன் எம்.பி., திறந்து வைத்தார்.

முதல் பணி ஆணையை மேயர் (பொ) பூ. ஜெகநாதன் வழங்கினார். எம்.பி.,க்கள் மனோஜ்பாண்டியன், விஜிலா, எம்.எல்.ஏ.,க்கள் நயினார் நாகேந்திரன், முத்துசெல்வி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் முருகையாபாண்டியன், வேளாண்மை பொறியியல் சேவை மையத் தலைவர் மகபூப்ஜான் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## பெலாந்துறை அணையை சீரமைக்க ரூ.17.5 கோடி நிதி

**கடலூர்,**

பெலாந்துறை அணைக்கட்டு ரூ.17.5 கோடி செலவில் சீரமைக்கப்படவுள்ளது. இதற்கான டெண்டர் விடும் பணி கடலூரில் வரும் 12-ம் தேதி நடைபெறவுள்ளது.

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் அருகே வெள்ளாற்றின் குறுக்கே பெலாந்துறையில், கடந்த 1876-ம் ஆண்டு ஆங்கிலேயர்களால் தடுப்பணை கட்டப்பட்டது. 200.80 மீட்டர் நீளமும், 6 அடி அகலமும் கொண்ட இதில் 17 பெரிய மதகுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த அணையை நம்பி பெலாந்துறை, கிழிமங்கலம், மோத்தமட்டை, ராஜேந்திரப்பட்டினம், ஸ்ரீமுஷ்ணம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் உள்ள சுமார் 12,234 ஏக்கர் விளை நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. பாசனத்திற்கென தனியே 5 கதவணைகள் வாயிலாக தண்ணீர் வெளியேற்றப்படும்.

அணை கட்டப்பட்டு சுமார் 125 ஆண்டுகளுக்கு மேல் ஆவதன் காரணமாகவும், போதிய அளவிற்கு பராமரிப்பு இன்மையாலும் அணைக்கட்டில் ஆங்காங்கே விரிசல் ஏற்பட்டுள்ளது. இது மேலும் சேதமானால் வரும் ஆண்டு பருவமழையின்

போது, அணையில் தேக்கி வைக்கப்படும் தண்ணீர் வெளியேறி வீணாகும் நிலை உள்ளது.

இதனால், அணைக்கட்டை சீரமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, அணையை சீரமைக்க நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.17.5 கோடி நிதியை முதல்வர் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதுகுறித்து பொதுப்பணித் துறை அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, பெலாந்துறை அணைக்கட்டை சீரமைக்க ரூ.17.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான டெண்டர் அறிவிப்பானது கடலூர் வெள்ளாறு வடிநில வட்ட கண்காணிப்பு பொறியாளர் அலுவலகத்தில் வரும் 12-ம் தேதி நடைபெற

உள்ளது என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயத்தில் முன்னேற்றம் : பவாருக்கு பிரணாப் பாராட்டு**




**நாக்பூர்**: ""மத்திய அமைச்சரவையில், கடந்த 10 ஆண்டுகளாக வேளாண்மைத் துறை அமைச்சராக பொறுப்பு வகித்து, விவசாயத் துறையில் மிகப்பெரிய

முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளார்," என, மத்திய அமைச்சர், சரத் பவாரை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பாராட்டினார். நாக்பூரில், "கிரிஷி வசந்த் 2014' என்ற ஐந்து நாள் தேசிய விவசாய கண்காட்சியை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி துவக்கிவைத்தார்.

அப்போது அவர் கூறியதாவது: கடந்த பத்தாண்டுகளில், விவசாய துறையில் பல்வேறு பயிர்களை உற்பத்தி செய்து வியத்தகு சாதனை படைத்துள்ளோம். இந்த கால கட்டத்தில், விவசாய அமைச்சராக, சரத் பவார் பதவி வகித்து, புதிய வழியை கடைபிடித்துள்ளார். விவசாய தொழில் துறையினர், விவசாயிகளுடன் இணைந்து, நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, விவசாய உற்பத்தியை பெருக்க வேண்டும்.

அரிசி ஏற்றுமதியில், உலக அளவில், இந்தியா முதலிடமும், கோதுமை ஏற்றுமதியில் இரண்டாம் இடமும் வகிக்கிறது. நான் நிதி அமைச்சராக இருந்த காலகட்டத்தில், கிழக்கு மாநிலங்களில், அரிசி விளைச்சலை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது அது, நல்ல பலனை கொடுத்துள்ளது.நாட்டில் மொத்த அரிசி உற்பத்தியில், 51 சதவீத அரிசி, நாட்டின் கிழக்கு மாநிலங்களான, அசாம், மேற்கு வங்கம், ஜார்க்கண்ட, பீகார் ஆகிய மாநிலங்களில் தான் வருகிறது. இவ்வாறு, அவர் கூறினார்.

## பதநீருக்கு கூடுதல் கொள்முதல் விலை :தொழிலாளர் எதிர்பார்ப்பு

**செய்யூர்** : பதநீர் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்று அரசுக்கு கடப்பாக்கம் பனைத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது, இடைக்கழிநாடு பேரூராட்சி. இங்கு பனை மரங்கள் அதிகம் உள்ளதால், பனைப் பொருட்களை நம்பி ஏராளமான மக்கள் வாழ்கின்றனர். இம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, 1968ம் ஆண்டு தமிழ்நாடு பனை வெல்லம் மற்றும் தும்பு கூட்டுறவு இணையத்தின் சார்பில், கடப்பாக்கத்தில் பனஞ்சீனி, பனை வெல்லம், தும்பு, நார் உற்பத்தி செய்ய 1.7 ஏக்கர் பரப்பளவில் ஆறு கட்டடங்கள் கட்டப்பட்டன. இப்பகுதியில் உற்பத்தியாகும் பதநீர் மூலம், நாள் ஒன்றுக்கு ஒரு டன் பனஞ்சீனி உற்பத்தி

செய்யப்படுகிறது. கட்டில் பின்னுதல், கூடை தயாரித்தல், அலங்காரப் பொருட்கள் தயாரித்தல் குறித்து, இந்த மக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.
அரசு போதிய நிதி ஒதுக்காததால், பனை பொருட்கள் உற்பத்தியும், பதநீரை முழுமையாக கொள்முதல் செய்யாததால், பனஞ்சீனி உற்பத்தியும் கடந்த, 20 ஆண்டுகளாக படிப்படியாக குறைந்து வருகிறது. ஆண்டுதோறும் ஜனவரி மாத இறுதியில் துவங்கி, ஜூன் மாதம் வரை பதநீர் கொள்முதல் செய்யப்படும். கடந்த 1ம் தேதி முதல் பதநீர் கொள்முதல் செய்யப்படுகிறது. இங்கிருந்து, எழும்பூருக்கு அனுப்பப்பட்டு, அங்கு பாக்கெட்டுகளில் அடைத்து, விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டுபோலவே இந்த ஆண்டும், ஒரு லிட்டர் பதநீர் 11 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதுகுறித்து, பனைத் தொழிலாளர்கள் கூறுகையில், 'பனை பொருட்களுக்கு போதிய விலை இல்லாததால், குறைந்த அளவு தொழிலாளர்களே இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். விலைவாசி உயர்வு, உற்பத்தி செலவு கூடியுள்ளதால், கொள்முதல் விலையை 15 ரூபாயாக உயர்த்த வேண்டும். உற்பத்தியாகும் பதநீர் முழுவதையும் கொள்முதல் செய்ய வேண்டும். இத் தொழிலுக்கான மூலப் பொருட்களை இலவசமாக வழங்க வேண்டும்' என்றனர்.

## உயர் தொழில்நுட்ப உற்பத்தி விவசாயிகளுக்கு 2 நாள் பயிற்சி

**காஞ்சிபுரம்** : அரசு தோட்டக்கலை சார்பில், விவசாயிகளுக்கு உயர் தொழில்நுட்பம் குறித்த இரண்டு நாள் பயிற்சி முகாம் நடந்தது. காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அவளூர் கிராமத்தில் கடந்த 7, 8 ஆகிய தேதிகளில் நடந்த பயிற்சி முகாமிற்கு தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ஸ்ரீவத்ஸவா தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி அலுவலர்கள் சீனிவாசன், தீனன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல் நாள் முகாமில், விவசாயிகளுக்கு நிலத்தில் மண் மாதிரி எடுத்தல், சொட்டு நீர்ப் பாசனத்தின் நன்மைகள். பசுமைக்குடில் மூலம் சாகுபடி செய்தல், கோடைக் காலங்களில் பயிர்களுக்கு பாய்ச்சப்படும் தண்ணீர், ஆவியாவதை தடுக்கும் வகையில் நிலப்போர்வை அமைத்து சாகுபடி செய்தல். துள்ளிய பண்ணையம் அமைத்தல்

உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகளை தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் அனிலா கிங்ஸ்லி அளித்தார். இரண்டாம் நாளில், மேற்கண்ட சாகுபடி முறை குறித்து, செயல்முறை மூலம் நிலங்களிலேயே பயிற்சி அளிக்கப்பட்டது.
கிளார், முசரவாக்கம் ஆகிய கிராமங்களில் உயர் தொழில்நுட்ப மூலம், சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களை விவாயிகள் நேரில் சென்று பார்வையிட்டு தெரிந்து கொள்ள தோட்டக்கலை துறை அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.
இம்முகாமில், அவளூர், ஆசூர், பெரியநத்தம், காலூார், கீழ்பேரம நல்லூார் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## சாத்தனூர் அணையில் நீர் திறப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி

**ரிஷிவந்தியம்** : சாத்தனூர் அணையில் நீர் திறந்ததால் பகண்டைகூட்ரோடு பகுதியில் சில கிராம ஏரி, வாய்க்காலில் தண்ணீர் வந்ததால் அத்தியூர் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணையின் நீரினை நம்பி பல லட்சம் ஏக்கர் பரப்பில் விவசாய நிலங்கள் உள்ளன. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் கவலையடைந்தனர். விவசாய நிலத்திற்காக தற்போது அணையின் வலதுபுற வாய்க்கால் மற்றும் தென்பெண்ணை ஆற்றில் இருந்து கடந்த 3 தினங்களுக்கு முன் தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் பகண்டை கூட்ரோடு பகுதியில் உள்ள சின்ன கொள்ளியூர், பெரிய கொள்ளியூர், கடுவனூர் போன்ற ஏரிகளுக்கும், அத்தியூர் வலதுபுற வாய்க்கால் வழியாக 10 கிராம விவசாய நிலங்களுக்கும் செல்கிறது. இதனால் 1,045 ஹெக்டேருக்கும் மேலான விளை நிலங்கள் பயன்பெறுவதால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## வாழைத்தார் வரத்து குறைந்தது விலையில் சீரான மாற்றம்

**பொள்ளாச்சி** : பொள்ளாச்சி மார்க்கெட்டில், வாழைத்தார் வரத்து குறைந்து காணப்பட்டது.

பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில், வாரந்தோறும் ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடக்கிறது. கோபி, உடுமலை, புதுக்கோட்டை, திருச்சி போன்ற வெளி மாவட்டங்கள்; ஆனைமலை, கோட்டூர், பள்ளிக்
கவுண்டன்பாளையம், சேத்துமடை, நஞ்சேகவுண்டன்பாளையம், சிங்காநல்லூர், தொப்பம்பெட்டி போன்ற பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து, மார்க்கெட்டுக்கு வாழைத்தார்கள் ஏலத்துக்கு வருகின்றன.

தொடர்ந்து, காந்தி மார்க்கெட்டில் வாழைத்தார் ஏலம் நேற்று நடந்தது. வாழைத்தார் வரத்து குறைந்து காணப்பட்டது. விலையிலும் சீரான மாற்றம் காணப்பட்டது.

பூவம்பழம்-550, கற்பூர வள்ளி-700, செவ்வாழை- 1,200, மோரிஸ்-450, நேந்திரம் ஒருகிலோ -25 மற்றும் கதளி கிலோ 47 ரூபாய்க்கும் ஏலத்திற்கு போனது. நேற்று 1,300 வாழைத்தார்கள் ஏலத்திற்கு வந்தன.

வியாபாரிகள் கூறுகையில்,"நேற்று நடந்த ஏலத்தில், 1,300 வாழைத்தார்கள் வந்தன. விலையிலும் சீரான மாற்றம் காணப்பட்டது. வரும் வாரத்தில், வாழைத்தார் வரத்து இருக்கும் என எதிர்பார்க்கிறோம்,' என்றனர்.

### யானைகள் நடமாட்டம்: வாழை பயிரிட தடை

**வால்பாறை** : எஸ்டேட் பகுதிகளில் யானைகள் நடமாட்டத்தைத் தவிர்க்க, குடியிருப்பு பகுதிகளில் வாழைகளை பயிரிடுவதை தவிர்க்க வேண்டும் என்று வனத்துறையினர் எச்சரித்துள்ளனர். ஆனைமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட வால்பாறை, மானாம்பள்ளி ஆகிய இரண்டு வனச்சரகங்களிலும், சமீப காலமாக யானைகள் நடமாட்டம் அதிக அளவில் காணப்படுகிறது. குறிப்பாக சின்கோனா(டேன்டீ), பன்னிமேடு, சங்கிலி ரோடு, வில்லோனி, உருளிக்கல், கல்யாணப்பந்தல் உள்ளிட்ட பல்வேறு எஸ்டேட்டுகளில் யானைகள் தனித் தனிப்பிரிவாக முகாமிட்டுள்ளன. குட்டிகளுடன் பகல் நேரத்தில் தேயிலைத்தோட்டத்தில் முகாமிடும் யானைகள், இரவு நேரத்தில் தொழிலாளர் குடியிருப்புப்பகுதிக்குள் புகுந்து வீட்டுத்தோட்டத்தில் பயிரிடப்பட்ட வாழைகளை

சாப்பிடுகின்றன. அதுவும் கிடைக்காத பட்சத்தில், ரேஷன் கடை மற்றும் சத்துணவு மையத்தை சேதப்படுத்தி உள்ளே இருக்கும் அரிசியை உண்கின்றன.
இந்நிலையில் கடந்த பத்து நாட்களாக கேரளாவிலிருந்து தமிழகத்திற்கு வந்த யானைகள் மீண்டும், அங்கு சென்றதால் தமிழக கேரள எல்லைப்பகுதியில் உள்ள வால்பாறையில் யானைகள் நடமாட்டம் குறைந்துள்ளது.
இது குறித்து வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது: யானைகளுக்கு மிகவும் பிடித்த உணவான வாழை, எஸ்டேட் பகுதியில் உள்ள தொழிலாளர் குடியிருப்புப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ளதால், அதை தேடி யானைகள் வரத் துவங்கிவிட்டன. இதே போல் ரேஷன் அரிசியின் வாசனை அதற்கு மிகவும் பிடிக்கும் என்பதால், இருக்கும் இடத்தை தேடிச்செல்கிறது.
யானைகள் நடமாட்டத்தை தடுக்க, எஸ்டேட் பகுதிகளில் வாழை பயிரிடுவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். ரேஷன் கடைகளில் அரிசியை இருப்பு வைப்பதை தவிர்க்க வேண்டும்.
தொழிலாளர்கள் தங்களது வீடுகளில் வைக்கப்படும் ரேஷன் அரிசியை வெளியில் வாசம் வராதவாறு, பிளாஸ்டிக் கவர் போட்டு மூடி வைக்க வேண்டும்.
இது குறித்து பொதுமக்களுக்கு ஏற்கனவே பல முறை விழிப்புணர்வு நோட்டீஸ் வினியோகம் செய்துள்ளோம். அதை தொடர்ந்து கடைபிடித்தாலே யானைகள் நடமாட்டத்தை தடுக்கலாம்.
இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

## பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பு பயிற்சி

**சிவகங்கை**:சிவகங்கை , மானாகுடியில் விவசாயி ஜெகதீசன் தோட்டத்தில், பண்ணை குட்டைகள் அமைத்து, மீன் குஞ்சுகள் வளர்ப்பு குறித்த பட்டறிவு பயிற்சி நடந்தது. நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை துணை இயக்குனர் அழகுநாகேந்திரன், விரிவாக்க அலுவலர் சுரேஷ் தலைமை வகித்தனர். இந்த விவசாயி பண்ணை குட்டைகளில் மீன்வளர்ப்பின் மூலம், பெறும் வருவாய் குறித்து அறிய, தேனி மாவட்டம் பெரியகுளம், சின்னமனூர், தேவாரம் பகுதி விவசாயிகள் பார்வையிட்டனர். சிவகங்கை மாவட்ட நீர்வடிப்பகுதி முகமை உதவி

செயற்பொறியாளர் ஈஸ்வரன், வட்டார பொறியாளர் ஜெயராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

## கால்நடை பராமரிப்பு பயிற்சி

**திருப்புத்தூர்**: திருப்புத்தூர் அருகே பூலாங்குறிச்சி அரசு கல்லூரி மாணவர்களுக்கு, கால்நடை பராமரிப்பு பயிற்சி நடந்தது. முதல்வர் வீரப்பன் தலைமை வகித்தார். அறிவியல் தொழில்நுட்ப சிறப்பு பயிற்சி நிறுவன தலைவர் ரிச்சர்டு ஜெகதீசன் முன்னிலை வகித்தார். வணிகவியல் துறை தலைவர் சேவுகன் வரவேற்றார். ஊராட்சி தலைவர் ராஜா,துணை தலைவர் கார்த்திக், மகளிர் மன்ற ஒருங்கிணைப்பாளர் மோகன் பங்கேற்றனர்.
புதுக்கோட்டை, கால்நடை ஆராய்ச்சி மண்டல பேராசிரியர் மலர்கண்ணன் பயிற்சி அளித்தார். பேராசிரியர் ரமாதேவி நன்றி கூறினார்.

## மாற்றுப் பயிர் சாகுபடியில் ஆர்வமில்லா விவசாயிகள்

மதுரை:மதுரை மாவட்டத்தில் தண்ணீர் பற்றாக்குறையான கோடையில், மாற்றுப் பயிர் சாகுபடி செய்வதில் விவசாயிகள் போதிய ஆர்வம் காட்டவில்லை.
இம்மாவட்டத்தில் கோடையில், மாற்றுப் பயிர் சாகுபடியில் அலுவலர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இரு ஆண்டுகளாக போதிய மழையில்லாததால், கண்மாய்கள், கிணறுகளில் தண்ணீர் இன்றி, நிலத்தடி நீரும் குறைந்து வருகிறது. இருக்கும் நிலத்தடி நீரை பாதுகாக்க, அதிக நீர்த்தேவைப்படாத, பயறு, சிறுதானிய வகைகளை பயிரிட அலுவலர்கள் ஊக்கமளிக்கின்றனர்.கிராமங்களுக்கு சென்று, தண்ணீர் உள்ள கிணறுகளை கணக்கெடுக்கின்றனர். அங்குள்ள விவசாயியிடம் கோடை சாகுபடி குறித்து விளக்குகின்றனர். பெரும்பாலானோர் ஏனோ மீண்டும், நெல் சாகுபடியில் குறியாக உள்ளனர். மாற்றுப் பயிர் சாகுபடிக்கு மாற, அவர்கள் தயாராக இல்லை, என அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.
ஜனவரியில் மட்டும் மாவட்டத்தில் 864 எக்டேரில் மீண்டும் நெல் நடவு செய்துள்ளனர். இது பிப்ரவரியில் ஆயிரத்தை தாண்டும். இருபோக வாடிப்பட்டி, அலங்காநல்லூர், கட்டக்குளம், சோழவந்தான், மதுரை மேற்கு, கிழக்கு

யூனியன்களில் இப்படி நெல் நடவு செய்துள்ளனர்.விவசாய இணை இயக்குனர் ஜெயசிங்ஞானதுரை கூறியதாவது: கோடையில் நிலத்தடி நீரை வீணாக்காது, நல்ல வருவாய் தரும் மாற்றுப் பயிர்களை பயிரிட வலியுறுத்துகிறோம். நெல் சாகுபடிக்கு 1280 மி.மீ., தண்ணீர் தேவை. மக்காச்சோளத்திற்கு 600 மி.மீ., தண்ணீர் போதும். பயறு, சோளம், சிறுதானியங்களை பயிரிட்டால், நெல்சாகுபடி காலத்திற்குள் குறைந்த தண்ணீரில் இரு முறை மகசூல் பார்க்கலாம்.
ஒரு எக்டேரில் 6 டன் நெல் கிடைத்தால், ரூ. 85 ஆயிரம் வருவாய் கிடைக்கும். தண்ணீர் வசதியுள்ள அதே இடத்தில் மக்காச்சோளம் பயிரிட்டால் 7 டன் மகசூல் பெறலாம். இதன் மூலம் 1.10 லட்சம் ரூபாய் கிடைக்கும்.கள்ளிக்குடியில் மானாவாரி நிலத்தில் ஒரு மழைப்பொழிவை நம்பி மக்காச்சோளம் பயிரிட்ட விவசாயிக்கு ஒரு எக்டேரில் 5 ஆயிரம் கிலோ கிடைத்துள்ளது. மாற்றுப் பயிரில் விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும், என்றார்.

## உணவு பதப்படுத்தும் நிறுவனம் விவசாயிகள் துவக்க வலியுறுத்தல்

**திண்டுக்கல்:** உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை ஒன்று சேர்ந்து துவக்க முன்வரும் விவசாயிகளுக்கு தேவையான மானியம், ஆலோசனை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களை அதற்குரிய உணவு பொருளாக மாற்றி விற்பனை செய்தால் அதிக லாபம் கிடைப்பதோடு, வாழ்க்கை தரமும் மேம்படும். இதனை செயல்படுத்துவதற்காக மாவட்ட அளவில் இயக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எந்தெந்த விளைபொருட்களை பதப்படுத்தி உணவு பொருளாக மாற்றலாம் என பட்டியலிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு உணவு பொருளுக்கும் உள்ள தேவைகள், அதனை உணவாக மாற்றுவதற்கான வழிமுறைகள், திட்ட மதிப்பீடு, உரிமம் பெறுவதற்கான ஆலோசனைகள் அனைத்தும் வழங்கப்பட்டு வருகின்றன.நிறுவனத்தின் தன்மைக்கேற்ப மானியத்தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எந்தெந்த பகுதியில் அதிகமாக என்ன விளைபொருள் சாகுபடி செய்யப்படுகிறதோ, அதையே உணவு பொருளாக மாற்றிக்கொள்ளலாம். அந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஒன்று சேர்ந்து தங்கள்

பெயரில் நிறுவனத்தை பதிவு செய்து கொள்ளலாம். பங்கு முதலீட்டிற்கேற்ப லாபத்தை பகிர்ந்து கொள்வதற்கும், நிறுவன வளர்ச்சிக்கும் தேவையான உதவிகள் வேளாண்மை துறையினரால் செய்து கொடுக்கப்படுகிறது.

## நாட்டுக்கோழி விலை உயர்வு

**திண்டுக்கல்:** வரத்து இல்லாததால் நாட்டுக்கோழி விலை கிலோவிற்கு ரூ. 20 அதிகரித்துள்ளது.

கிராமங்களில் உள்ள சந்தைகளில் இருந்து நாட்டு கோழிகளை மொத்தமாக வாங்கும் வியாபாரிகள், நகர் பகுதியில் இறைச்சி விற்பனைக்கு அவற்றை பயன்படுத்துகின்றனர். திண்டுக்கல் ஆர்.எஸ்.ரோட்டில் கோழி கறி விற்பனைக்கென தனி இடத்தை நகராட்சி ஒதுக்கீடு செய்துள்ளது. கடந்த வாரம் கிலோ ரூ. 280 க்கு விற்பனை செய்யப்பட்ட நாட்டுக்கோழி, தற்போது ரூ. 20 அதிகரித்துள்ளது.இது குறித்து வியாபாரிகள் கூறுகையில்,""கம்பு, திணை போன்ற தானியங்களின் விலை அதிகரித்துள்ளது. மேலும் கிராமங்களில் வசிப்பவர்கள், கோழியை தவிர்த்து விட்டு கால்நடைகள் வளர்ப்பதில் அதிக கவனம் செலுத்துகின்றனர். கிராம சந்தைகளில் வரத்து குறைந்திருப்பதால், நாட்டுக்கோழியின் விலை கிலோவிற்கு ரூ. 20 வரை அதிகரித்துள்ளது," என்றனர்.

## பழையபேட்டை சந்தையில் புளியின் வரத்து...அதிகரிப்பு! அதிகளவில் குவிந்த வெளிமாநில விவசாயிகள்

**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி பழையபேட்டையில் நடக்கும் சந்தையில், புளியின் வரத்து அதிகரித்துள்ளதால், தமிழகத்தில் உள்ள வியாபாரிகள் மட்டுமன்றி, வெளி மாநில வியாபாரிகள் நேற்று அதிகளவில் குவிந்தனர்.

வெப்பமண்டல பகுதியான, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உரிகம், பேரிகை, தீர்த்தம், வேப்பனப்பள்ளி, கிருஷ்ணகிரி, மத்தூர், காவேரிப்பட்டணம், பர்கூர், ராயக்கோட்டை, ஊத்தங்கரை ஆகிய சுற்றுவட்டார பகுதிகளில், அதிக அளவில் புளி உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு, உற்பத்தி செய்யப்படும், தமிழகத்தின் வெளி மாவட்டங்கள் மட்டுமன்றி, இந்தியாவில் உள்ள பல மாநிலங்களுக்கு புளி

ஏற்றுமதி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் ஆண்டுக்கு சராசரியாக, 10 ஆயிரம் டன்னுக்கு மேல் புளி உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் ராஞ்சிக்கு அடுத்தப்படியாக, கிருஷ்ணகிரி பழையபேட்டையில் இரண்டாவது பெரிய புளி சந்தை கூடுகிறது. பொதுவாக, தென் மாநிலங்களில் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலும், வட மாநிலங்களில், மார்ச் முதல், ஏப்ரல் வரையிலும், புளி சீஸன் இருக்கும். கிருஷ்ணகிரி பழையபேட்டையில், புளி சீஸன் காலங்களில், வாரந்தோறும் வியாழன் மற்றும் ஞாயிறு கிழமைகளில் புளி சந்தை கூடும்.

இந்த சந்தைக்கு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும், புளி மட்டுமன்றி அண்டை மாநிலங்களான, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து வியாபாரிகள் புளியை விற்பனைக்கு வைப்பார்கள்.

கிருஷ்ணகிரி பழையபேட்டை புளி சந்தையில், விலையை வைத்துதான் இந்தியாவின் பெரிய புளி சந்தையான ராஞ்சி மற்றும் ஜபல்பூர் புளி சந்தைகளில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி பழையபேட்டை புளி சந்தையில், சிறு விவசாயிகள் மட்டுமின்றி, புளி குத்தகைதாரர்கள் பலர் மூட்டை, மூட்டையாக கொண்டு வந்து வைப்பர். இதனை, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், அண்டை மாநிலங்களில் இருந்தும் வரும் வியாபாரிகள், பார்வையிட்டு புளியின் ரகத்துக்கு தகுந்த மாதிரி விலை நிர்ணயம் செய்து ஏலம் கேட்பர்.கடந்த ஆண்டு வட மாநிலங்களில் புளி விளைச்சல் அதிகரித்து காணப்பட்ட நிலையில், கிருஷ்ணகிரியில் ஒரு கிலோ புளி, 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு மாவட்டத்தில் புளி, பம்பர் விளைச்சலாக உள்ள நிலையில், நேற்று நடந்த கிருஷ்ணகிரி சந்தையில் ஒரு கிலோ புளி, 23 ரூபாயில் இருந்து, 25 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.நேற்று மட்டும் கிருஷ்ணகிரி சந்தையில், ஐந்தாயிரம் மூட்டை புளி விற்பனையானது. இதனால், புளி உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து, வேப்பனப்பள்ளியை சேர்ந்த புளி குத்தகை வியாபாரி மாரப்பா கூறியதாவது:

கடந்த ஆண்டும், எங்கள் பகுதியில், புளியின் விளைச்சல் அமோகமாக இருந்தும், புளி அடிக்க, ஆள் கூலி மற்றும் போக்குவரத்து செலவு அதிகரித்ததால், பெரும் நஷ்டம் ஏற்பட்டது. மேலும், கடந்த ஆண்டு புளி விளைச்சல் அறுவடை செய்யும் நேரத்தில், கடும் சூறைகாற்றுடன் மழை பெய்ததால், 25 சதவீத புளி அறுவடை செய்ய முடியாமல் சேதமடைந்தது.இந்த ஆண்டு மாவட்டத்தில் புளி விளைச்சல் அதிகம் இருந்தும், கிருஷ்ணகிரி புளி சந்தைக்கு, புளியை வாங்க, தமிழகத்தில், கன்னியாகுமரி, மதுரை, தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை மற்றும் கேரள மாநிலத்தில் இருந்து, அதிக அளவில் வியாபாரிகள் வந்ததால், புளி விலை அதிகரித்துள்ளது. இன்று (நேற்று) நடந்த புளி சந்தையில், அதிக பட்சமாக ஒரு கிலோ, 25 ரூபாய் வரை விற்பனையானது. அதனால், வரும் வாரங்களில் கூடும் சந்தையில், புளி விலை மேலும் உயர வாய்ப்புள்ளது, என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கொங்கணாபுரத்தில் பருத்தி ஏலம் : 2 நாளில் ரூ.8 கோடிக்கு வர்த்தகம்**



**இடைப்பாடி:** சேலம் மாவட்டம் இடைப்பாடி அருகே கொங்கணாபுரத்தில், திருச்செங்கோடு வேளாண்மை கூட்டுறவு உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது.இந்த வாரம் ஏலம்

தொடங்கிய முதல் நாளிலே, பருத்தி மூட்டை வரத்து அதிகமாக இருந்ததால், தொடர்ந்து நேற்றும் ஏலம் நடைபெற்றது. பெங்களூர், ஓசூர், திருவண்ணாமலை, திருச்சி, ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து விவசாயிகள் அதிகளவில் பருத்தி மூட்டைகளை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். நேற்று முன்தினம் நடைபெற்ற ஏலத்தில் வியாபாரிகள், விவசாயிகள் என 1500 பேர் கலந்து கொண்டனர். 35 ஆயிரம் பருத்தி மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. 15 ஆயிரம் பருத்தி மூட்டைகள் விற்பனையானது.

மொத்தம் ரூ.3 கோடியே 90 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது. வெளி மாநில விவசாயிகள், வியாபாரிகள் அதிகளவில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நேற்று நடைபெற்ற ஏலத்தில் 17 ஆயிரம் பருத்தி மூட்டைகள் விற்பனையானது. மொத்த வர்த்தகம் ரூ.4 கோடியே 10 லட்சமாக இருந்தது. பிடி ரகம் குவிண்டாலுக்கு ரூ.4,800 முதல் ரூ.5,750 வரை விலை போனது. டிசிஎச் முதல் ரகம் குவிண்டாலுக்கு ரூ.6,850 முதல் ரூ.7,650 வரை விலை போனது. இரண்டாவது ரகம் ரூ.6,200 முதல் ரூ.6,800 வரை விலை போனது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் வரத்து 26 ஆயிரம் பருத்தி மூட்டைகளாக இருந்தது. வர்த்தகம் ரூ.7 கோடியே 60 லட்சத்திற்கு நடைபெற்றது.

**பால் உற்பத்தியால் கிராம பொருளாதாரம் மேம்படும்**



**சண்டிகர்:** கிராம பொருளாதாரத்தை மேம்படுத்த பால் உற்பத்தி சார்ந்த தொழிலில் விவசாயிகள் ஈடுபடவேண்டும் என்று பஞ்சாப் முதல்வர் தெரிவித்துள்ளார். பஞ்சாப் மாநிலத்திலுள்ள நீயூ கிரெயின் மார்க்கெட்டில், 'பால் பண்ணை மற்றும் வேளாண் கண்காட்சியை' அந்த மாநில முதல்வர் பிரகாஷ்சிங் பாதல் நேற்று

தொடங்கி வைத்தார். பின்னர் அவர் பேசுகையில், 'சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகள் நெல், கோதுமை சாகுபடி செய்யும் பாரம்பரிய தொழிலில் இருந்து தங்களை மாற்றிக் கொண்டு பால் உற்பத்தி தொழிலில் ஈடுபடவேண்டும். இதன் மூலம் மாநிலத்தில் இரண்டாவது வெண்மை புரட்சியை ஏற்படுத்த வேண்டும். பால் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அரசு அனைத்து உதவிகளையும் செய்து ஊக்குவிக்கும். இதன் மூலம் கிராம பொருளாதாரத்தை மேலும் வளர்ச்சி பெற செய்யமுடியும்' என்றார்.

## 1.50 லட்சம் கோடி இலக்கு : முட்டை ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கை



**நாமக்கல்:** நாமக்கல்லில் மத்திய வோளண் அமைச்சத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அபிடா அமைப்பு சார் பில், முட்டை ஏற்றுமதியாளர்கள், பண்ணையாளர்கள் அடங்கிய கலந்துரை யாடல் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் செயலாளர் சந்தோஷ்சாரங்கி பேசியதாவது:பறவை காய்ச்சல் காரணமாக அரபு நாடுகள் சில இந்தியாவில் இருந்து முட்டை மற்றும் கோழி இறைச்சியை இறக்குமதி செய்ய தடை விதித்திருந்தது. அபிடா அமைப்பு மேற்கொண்ட முயற்சி காரணமாக சில நாடுகள் தடையை விலக்கி கொண்டுள்ளது.

வெளிநாடுகளில் புதிய ஏற்றுமதி சந்தைகளை கண்டறியவும், கோழிப்பண்ணை தொழில் சார்ந்த முட்டை, கோழி இறைச்சி பொருட்களை இறக்குமதிக்கு விதித்துள்ள தடையை நீக்கவும் தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் முட்டை ஏற்றுமதி வரும் ஆண்டுகளில் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்.

கடந்த ஆண்டு இந்தியாவில் இருந்து, ரூ.1.20 லட்சம் கோடிக்கு கோழிப்பண்ணை மற்றும் விவசாய தொழில் சார்ந்த பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ.1.50 லட்சம் கோடிக்கு ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தொடர் முகூர்த்தம் காரணமாக மல்லி, பிச்சிப்பூ விலை ரூ.1,200 ஆனது**



**நெல்லை:** தொடர் முகூர்த்தம், திருவிழாக்களினால் மல்லி மற்றும் பிச்சிப்பூக்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. மல்லிகைப்பூ மற்றும் பிச்சிப்பூக்கள் சராசரியாக கிலோ ரூ.500 என விற்பனையாகி வருகிறது. நேற்று முன்தினம் இந்த இரண்டு வகை பூக்களுமே ரூ.500க்கு விற்கப்பட்டது. இந்நிலையில் நேற்று காலை திடீரென இரு மடங்கு உயர்ந்தது. பிச்சிப்பூ முதல் ரகம் கிலோ ரூ.1,200க்கும், 2ம் ரகம் கிலோ ரூ.1,100க்கும் விற்கப்பட்டது. மல்லிகைப்பூ முதல் ரகம் ரூ.1,000, 2ம் ரகம் ரூ.900 க்கு விற்பனையானது சம்பங்கி கிலோ ரூ.350ஆக இருந்தது. பூ விலை உயர்ந்தாலும், வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு வாங்கி சென்றனர்.

இதுகுறித்து, பூ மொத்த வியாபாரிகள் கூறுகையில், ‘தை மாத முகூர்த்த நாட்களில் விலை உயர்வு வாடிக்கையே. இன்றும், 10, 12ம் தேதியும் முகூர்த்த நாட்கள். தை மாதத்தின் கடைசி முகூர்த்த தினங்களான இந்த நாட்களில் திருமணம் மட்டுமின்றி நிச்சயதார்த்தம், பல சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். இதனால் பூக்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது’என்றனர்.

**அரிசி வரத்து குறைவால் மூட்டைக்கு ரூ.200 விலை உயர்வு**



**சேலம்:** தமிழகத்தில் நெல் விளைச்சல் பாதிப்பால் அரிசி வரத்து குறைந்துள்ளது. இதனால் சேலம் செவ்வாய்பேட்டை மார்க்கெட்டில் 75 கிலோ எடை கொண்ட அரிசி மூட்டை ரூ150 முதல் ரூ200 வரை விலை உயர்ந்துள்ளது. தஞ்சாவூர், விக்கிரவாண்டி, சங்கராபுரம் பகுதிகளில் வெள்ளைபொன்னி, டீலக்ஸ் பொன்னி, பிபிடி பொன்னி, இட்லி அரிசி கிராந்தி, குண்டு கார், கிட்டாகார் நெல் ரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர். இதே போல் ஆந்திரா மாநிலம் நெல்லூர், குண்டூர், விஜயவாடாவில் பொங்கல் பச்சரிசியும், கர்நாடகா மாநிலத்தில் கர்நாடக பொன்னி அரிசியும் அதிகளவு விவசாயிகள் சாகுபடி செய்துகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தில் விளைந்த நெல்லை, விவசாயிகள் அறுவடை செய்து, நெல் அரவை ஆலைக்கு அனுப்புகின்றனர். அங்கு அரிசியாக்கி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு டன் கணக்கில் அரிசி மூட்டை அனுப்பப்படுகிறது.

நடப்பாண்டு பிப்ரவரி மாதம் துவங்கியும், இன்னும் சேலம் செவ்வாய்பேட்டை அரிசி மண்டிகளுக்கு புதிய அரிசி வரத்து இல்லை. மார்க்கெட்டுக்கு வழக்கமாக வரவேண்டிய அரிசி வரத்து குறைந்துள்ளதால் விலை உயர்ந்துள்ளது.இதனால், அரிசி விற்பனை குறைந்துள்ளதாக வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் நடப் பாண்டு நெல் விளைச்சல் குறைந்துள்ளது. கடந் தாண்டு பிப்ரவரியில் சேலம் மார்க்கெட்டுக்கு அரிசி அதிகரித்து இருந்தது.

ஆனால் கடந்தாண்டை காட்டிலும் நடப்பாண்டில் அரிசி வரத்து குறைந்துள்ளது. விளைச்சல் பாதிப் பால் 1000 மூட்டை வந்த கடைக்கு, 500 முதல் 600 மூட்டை அரிசி மட்டுமே வருகிறது. வரத்து குறைந்துள்ளதால் 75 கிலோ கொண்ட மூட்டைக்கு ரூ150 முதல் ரூ200 வரை விலை உயர்ந்துள்ளது.இன்னும் ஒரு

மாதத்தில் புது அரிசி அதிகம் வரவுள்ளது. அப்போது, 75 கிலோ எடைக்கொண்ட மூட்டைக்கு ரூ200 முதல் ரூ300 விலை குறைய வாய்ப்புள்ளது.
நேற்று நிலவரப்படி 25 கிலோ எடைக்கொண்ட வெள்ளை பொன்னி அரிசி பழசு ரூ1200 முதல் ரூ1300 எனவும், புதுசு ரூ1050 முதல் ரூ1150 எனவும், பிபிடி பொன்னி பழசு ரூ.1050 முதல் ரூ1150 எனவும், புதுசு ரூ850 முதல் ரூ950 எனவும், கர்நாடக பொன்னி பழசு ரூ1150 முதல் ரூ1250 எனவும், புதுசு ரூ1000 முதல் ரூ1100 எனவும், குண்டு கார் ரூ700 முதல் ரூ750 எனவும், திடம் கிராந்தி ரூ900 முதல் ரூ925 என விற்கப்படுகிறது.

**சம்பங்கியில் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த பயிற்சி**

**தர்மபுரி, :** சம்பங்கியில் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.
தர்மபுரி மாவட்டத்தில் சம்பங்கி பூ 600 ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது. தொப்பூர், பாகல்பட்டி, பொம்மிடி, பாளையம்புதூர், ஜருகு, நல்லம்பள்ளி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சம்பங்கி சாகுபடி செய்யப்படுகிறது. சந்தையில் நேற்று முன்தினம் ஒருகிலோ சம்பங்கி ரூ40 முதல் ரூ60 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது குளிர்ந்த காற்று, வெப்ப காற்று கலந்து வீசுவதால் பூச்செடிகள் நோய் தாக்குதலுக்கு ஆளாகின்றன. நோய் தாக்குதலை கட்டுப்படுத்த பாப்பாரப்பட்டி அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. முகாமில் பாப்பாரப்பட்டி அறிவியல் நிலைய முனைவர் இந்துமதி கலந்து கொண்டு, 'அதிக மகசூல் பெற ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும். மாவுப்பூச்சி தாக்குதலை உடனடியாக கண்டறிந்து கட்டுப்படுத்த வேண்டும். இதன் மூலம் சாகுபடியை அதிகரிக்கலாம்' என்று அறிவுறுத்தினார்.

**தேவை அதிகரிப்பால் வாழை இலை விலை உயர்வு**

**போச்சம்பள்ளி, :** திருமணம் மற்றும் திருவிழா சீசன் தொடங்கி உள்ளதால் போச்சம்பள்ளியில் வாழை இலை விலை உயர்ந்துள்ளது.

போச்சம்பள்ளியில் திருமண சீசன் என்பதால் கடந்த சில தினங்களுக்கு முன் ரூ2.30 க்கு விற்கப்பட்ட ஒரு வாழை இலை நேற்று ரூ4 ஆக விலை உயர்ந்தது. தற்போது திருமணம் மற்றும் திருவிழா சீசன் தொடங்கி உள்ளதால் வாழை இலைக்கான தேவை அதிகரிணீத்துள்ளது. இதனால் விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம் ஒரு இலை ரூ2.30க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஒரு இலை ரூ4 க்கு விற்கப்படுகிறது.

**பாலேகுளி, விருப்பம்பட்டி ஏரியிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு 83.76 ஹெக்டேர் பயன்பெறும்**

**போச்சம்பள்ளி, :** பாலேகுளி ஏரி மற்றும் விருப்பம்பட்டி ஏரியிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 83.76 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

கிருஷ்ணகிரி அணையின் இடது புறக்கால்வாயினை நீட்டிப்பு செய்து பாலேகுளி ஏரியில் இருந்து சந்தூர் வரை உள்ள 28 ஏரிகளின் கீழ் உள்ள 334.60ஹெக்டர் நிலங்கள் பாசன வசதி பெற புதிய கால்வாய்கள் அமைக்கும் பணி தற்போது முடிக்கப்பட்டது. மேலும், போச்சம்பள்ளி வட்டம், பாரூர் ஏரியின் கிழக்கு பிரதான கால்வாயின் கடைமடை ஏரியான விருப்பம்பட்டி ஏரியிலிருந்து பாளேதோட்டம் ஏரி மற்றும் 4 ஏரிகள், ஒரு குட்டை ஆகியவற்றின் மூலம் 83.76 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையிலான பணிகள் முடிவடைந்துள்ளது. இதையடுத்து, பாலேகுளி ஏரி மற்றும் விருப்பம்பட்டி ஏரியிலிருந்து தண்ணீர் திறப்பு விழா நடைபெற்றது. கலெக்டர் ராஜேஷ் தண்ணீரை திறந்து வைத்தார். இக்கால்வாய் மூலம் பாலேகுளி, நாகோஜனஹள்ளி, வீரமலை, விளங்காமுடி, வெப்பாலம்பட்டி மற்றும் காட்டகரம், ஆகிய கிராமங்களின் கீழ் உள்ள 334.60 ஹெக்டர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், கிருஷ்ணகிரி அணைக்கு வரும் உபரி நீரை பாலேகுளி ஏரி வழியாக 27 ஏரிகளுக்கு, இக்கால்வாயின் மூலம் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

போச்சம்பள்ளி வட்டத்தில் உள்ள விருப்பம்பட்டி ஏரியில் புதிய கால்வாய் 5.4 கி.மீ.தூரத்திற்கு ரூ1.75 கோடி மதிப்பில் வெட்டப்பட்டுள்ளது. இக்கால்வாய் மூலம் பாரண்டப்பள்ளி, அயலம்பட்டி, கரடனூர், ஓட்டக்கல்லனூர், திப்பம்பட்டி, பாளேத்தோட்டம், ஆகிய கிராமங்களின் கீழ் உள்ள 83.76ஹெக்டர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

நிகழ்ச்சியில் பர்கூர் எம்.எல்.ஏ. கிருஷ்ணமூர்த்தி, ஊத்தங்கரை எம்.எல்.ஏ மனோரஞ்சிதம், மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியன், மாவட்ட ஊராட்சி குழுதலைவர் அசோக்குமார், பேரூராட்சி தலைவர் அண்ணாதுரை, மாவட்ட கவுன்சிலர்கள் ரவிச்சந்திரன், பெருமாள், சாந்தி, வருவாய் கோட்டாட்சியர் லதா, ஊராட்சி தலைவர்கள் மனோரஞ்சிதம் குமார், சிவாஜி, கூட்டுறவு சங்க தலைவர் வைரமணி, துணை தலைவர் வேணுகோபால் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**போச்சம்பள்ளி சந்தையில் 10 டன் அவரை விற்பனை**

**போச்சம்பள்ளி, :** போச்சம்பள்ளி வாரச்சந்தையில் நேற்று 10 டன் அவரை விற்பனையானது.

போச்சம்பள்ளி வாரச்சந்தை ஞாயிற்றுகிழமைதோறும் கூடுகிறது. இந்த சந்தைக்கு ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்தும், அரூர், தர்மபுரி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, வேலூர், காவேரிப்பட்டணம் உட்பட பல்வேறு இடங்களில் இருந்தும், விவசாயிகள் விளை பொருட்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இதே போல், போச்சம்பள்ளி உட்பட சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சந்தைக்கு வந்து பொருட்களை வாங்கிச் செல்கின்றனர். இந்நிலையில், போச்சம்பள்ளி, மத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் தற்போது 25 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் அவரை, துவரை, உளுந்து, பச்சைபயறு, காரமணி போன்ற பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

தற்போது அறுவடை தொடங்கி உள்ளதால் போச்சம்பள்ளி வாரச்சந்தைக்கு பயறு வகைகள் அதிகம் விற்பனைக்கு வருகிறது. நேற்று 10 டன் அளவிற்கு அவரை விற்பனைக்கு வந்தது. ஒரு கிலோ ரூ60க்கு விற்பனையானது. பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர்.

**மா சீசன் தொடக்கம் கடும் வெயில், காற்றால் பூக்கள் உதிரும் அபாயம்**

**கிருஷ்ணகிரி, :** கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா சீசன் துவங்கியுள்ள நிலையில் கடும் வெயில் மற்றும் காற்றால் பூக்கள் உதிரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 40 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் மா சாகுபடி செய்யப்படுகிறது. சுவை மிகுந்த ரகங்களான அல்போன்சா, பெங்களூரா, செந்தூரா, மல்கோவா, நீலம், பங்கனப்பள்ளி மற்றும் பீத்தர் போன்ற வகையான மாம்பழங்கள் அதிக அளவில் விளைகிறது. இவற்றில் பெங்களூரா 60 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விளைகிறது. இங்கு விளையும் மாங்கனிகள் மிகவும் சுவையாக உள்ளதால் வெளிமாநிலங்களுக்கும், அமெரிக்கா, ஜப்பான் போன்ற வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இம்மாவட்டத்தில் விளையும் தோத்தாபுரி எனும் பெங்களூரா வகை மாம்பழத்தில் இருந்தும், அல்போன்சா வகை மாம்பழத்தில் இருந்தும் மாங்கூழ் தயாரிக்கப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் பெரியதும், சிறியதுமாக சுமார் 40 மாங்கூழ் அரைக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. இந்த தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் மாங்கூழ் 62 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதில் 75 சதவீதம் வளைகுடா நாடுகளான சவுதி அரேபியா, குவைத், ஏமன் போன்ற நாடுகளுக்கும், 15 சதவீதம் ஐரோப்பியா நாடுகளுக்கும், 10 சதவீதம் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

எந்த ஆண்டும் இல்லாத வகையில், கிருஷ்ணகிரியில் இந்த ஆண்டு மா மரங்களில்

அதிக அளவு 100 சதவீதம் பூக்கள் பூத்து குலுங்குகிறது. இதனால் மா விவசாயிகள் மரத்தில் பராமரிப்பு பணிகள் செய்து, அதிக அளவு காய் காய்க்கும் என எதிர்பார்ப்புடன் உள்ளனர். ஆனால் டிசம்பர் மாதம் முதல்  பெய்ய வேண்டிய மழை பெய்யவில்லை. இதன் காரணமாகவும், கடும் வெயிலின் தாக்கத்தாலும், அதிக அளவு காற்றாலும் பூக்கள் உதிர்ந்து வருகிறது. இதனால் இவ்வருடம் மாங்காய் விளைச்சல் குறைந்துவிடுமோ என்ற அச்சத்தில் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

**நீடாமங்கலத்தில் இருந்து 1,000 டன் அரிசி புதுகை அனுப்பிவைப்பு**

**நீடாமங்கலம், :** நீடாமங்கலத்தில் இருந்து பொது விநியோக திட்டத்துக்காக 1,000 டன் அரிசி நேற்று சரக்கு ரயிலில் புதுக்கோட்டைக்கு அனுப்பி வைக்கப்படடது. திருவாரூர் மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் அரவைக்காககவும், அதேபோல் அரைக்கப்பட்ட அரிசி பொது விநியோக திட்டத்துக்கும் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்று நீடாமங்கலம் ரயில் நிலையத்தில் இருந்து பொது விநியோக திட்டத்துக்கு சரக்கு ரயிலில் 20 வேகன்களில்  1,000 டன் அரிசி, அதே ரயிலில் 9 வேகன்களில் 300 டன் நெல் அரவைக்காகவும் புதுகோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதனை ஆய்வு செய்ய வருகை தந்த நுகர் பொருள் வானிப கழக திருவாரூர் மாவட்ட முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி கூறுகையில், பாமணியில் உள்ள மத்திய சேமிப்பு கிடங்கு, சுந்தரகோட்டையில் உள்ள நவீன அரிசி ஆலையில் இருந்து சன்னரக அரிசி 1000 டன்னும், நீடாமங்கலம் பகுதியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலிருந்து 300 டன் நெல் அரவைக்கும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அனுப்பப்படுகிறது. இதற்கு முன் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 1,000 டன் சன்ன ரக அரிசி அனுப்பப்பட்டுள்ளது என்றார். தரைக்கட்டுப்பாடு மேலாளர் கணேசன் உடனிருந்தார்.

**மழையின்றி கருகிய நெற்பயிர்கள் மாடுகளுக்கு இரையாகும் அவலம்**

**திருப்புவனம், :** மழை யின்றி கருகிய நெற்பயிர்கள், மாடுகளுக்கு இரையாகும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

திருப்புவனம் தாலுகாவில் திருப்பாச்சேத்தி, திருப்புவனம், கொந் தகை பகுதிகளில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி செய்துள்ளனர். நெல் பால் பிடிக்கும் தருணத்தில் போதிய மழை இல்லாமல் வறட்சி ஏற்பட்டதால், பெரும்பாலான நிலங்களில் நெற்பயிர்கள் விளைச்சலின்றி சாவியாகிவிட்டன. விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர். இதனால் விளை நிலங்களில் ஆடு, மாடுகளை மேய விட்டுள்ளனர்.  மடப்புரத்தை சேர்ந்த விவசாயி ராஜாமணி கூறு கையில், `தற்போதைய சூழ லில் விவசாயம் செய்வதே கஷ்டமான காரியமாக மாறிவிட்டது. இருந்தபோதும், விளக்கை தேடிச்செல்லும் விட்டில்பூச்சியின் கதையாக தொடர்ந்து விவசாயம் செய் கிறோம். இதில் லாபத்தை காட்டிலும் நஷ்டமே கிடை க்கிறது. எங்களுக்கு வேறு தொழி லும் தெரியாது.

நடுமடை, மேல்மடை விவசாயிகள் 200 ஏக்கரில் நெல் நடவு செய்தோம். நெற்கதிர்கள் பால் பிடிக்கும் தரு ணத்தில் மழை இல்லாததால் பெரும்பாலும் சாவியாகிவிட்டன. கடந்த காலங்களில் ஏக்கருக்கு 25 மூடை நெல் கிடைத்தது. இந்த ஆண்டு 10 மூடைதான் கிடைத்துள்ளது. இதனால் கடும் நெருக்கடியை சந்தித்துள்ளோம். இதனை அரசு புரிந்துகொண்டு உரிய நிவா ரணம் வழங்க வேண்டும் என்றார்.

மாவட்ட விவசாயிகள் சங்க தலை வர் ஆதிமூ லம் கூறுகை யில், `திருப்புவனம் தாலு காவில் சுமார் 3 ஆயிரம் ஏக்கரில் கிணற்றுநீர் பாசனத்தை நம்பி நெல் சாகுபடி செய்துள்ளனர். இதில் பெரும்பாலான நிலங்கள் தரிசாக மாறிவிட்டன. திருப்புவனம், திருப்பாச்சேத்தி, கொந்தகை உள்வட்டங்களில் கிணற்றுப் பாச னத்தை நம்பி நெல், கரும்பு, தென்னை, வாழை விவசாயம் நடைபெற் றது. போதிய

மழை பெய்யாததால் விளைச்சல் 40 சதவீதமே கிடைத்துள் ளது. அரசு வறட்சி நிவா ரணம் வழங்க வேண்டும் என்றார்.

**பெரியாறு அணையில் தண்ணீர் நிறுத்தப்பட்டதால் கருகும் பயிர்களை காப்பாற்ற போர் தண்ணீர் தெளிப்பு**

**கூடலூர், :** முல்லை பெரியாறு அணையிலிருந்து விவசாயத்திற்காக திறக்கப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கருகும் நெற்பயிற்களை காப்பாற்ற விவசாயிகள் போர் தண்ணீரை டேங்கர் லாரிகளில் பிடித்து பயிர்களுக்கு தெளிக்கின்றனர்.

தேனி மாவட்டத்தில் முல்லை பெரியாற்று தண்ணீர் மூலம் 14,707 ஏக்கர் நிலப்பரப்பில் இருபோக நெல் விவசாயம் நடந்து வருகிறது. கடந்த 2013, ஜூன் 28ம் தேதி முதல்போக பாசனத்திற்காக முல்லைப் பெரியாற்றிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் கூடலூர், கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், வீரபாண்டி பகுதிகளில் முதல் போகம் முடிந்தது.

கம்பம், கூடலூர், உத்தமபாளையம் பகுதிகளில் இரண்டாம் போக நெல் விவசாயம் செய்யப்பட்டு சுமார் 90 நாட்களுக்கு மேல் ஆகியுள்ளது. குறிப்பாக சின்ன வாய்க்கால் மூலம் பாசன வசதி பெறும் மஞ்சக்குளம் பகுதியில் தற்போது நெற்பயிர்கள் நன்கு வளர்ந்து கதிர்கள் உருவாகி பால் பிடித்து நெல் மணிகளாக மாறி உள்ளன. இன்னும் ஒருசில வாரத்தில் அறுவடை தொடங்க உள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு முல்லை பெரியாறு அணையின் நீர் மட்டம் குறைந்து வந்தது. அணையின் இருப்புநீர் மக்களின் குடிநீர் தேவைக்கு அவசியம் என்பதால் பொதுப்பணித்துறை அதிகாரிகள், பெரியாறு அணையிலிருந்து விவசாயத்திற்கு திறக்கும் தண்ணீரை முற்றிலும் நிறுத்தினர்.

நெல் மணிகள் உருவாகும் நேரத்தில் தண்ணீர் தடைபட்டதால் விவசாயம் பாதிக்கும் நிலைக்கு விவசாயிகள் உள்ளாகி உள்ளனர். இந்த நிலையில்

சின்னவாய்க்கால் தண்ணீரை நம்பி உள்ள மஞ்சக்குளம் பகுதியில் கருகி வரும் நெற்பயிர்களை காப்பதற்காக, விவசாயிகள் தங்கள் வீடுகளில் உள்ள போர்வெல்களில் இருந்து டேங்கர் லாரிகளில் தண்ணீர் பிடித்து வயல்களுக்கு பாய்ச்சி வருகின்றனர்.

இந்த நீரை குடங்களில் பிடித்து பயிர்களுக்கு தெளித்து வருகின்றனர்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகையில், 'இன்னும் ஒரு தடவை தண்ணீர் கொடுத்தால் இரண்டாம் போக விவசாயத்தை நிறைவு செய்து விடமுடியும். தற்போதைய நிலையில் வளர்ந்த பயிரை காப்பாற்றுவதற்காக போர்வெல்களில் தண்ணீர் பிடித்து தெளித்து வருகிறோம்.

இன்னும் ஒரு தண்ணீர் வழங்கி விவசாயிகளை நஷ்டடத்தில் இருந்து பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

**புடலங்காய் அறுவடை தீவிரம் விலை அதிகரிப்பால்விவசாயிகள் மகிழ்ச்சி**

**சின்னமனூர், :** சின்னமனூரைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் தற்போது புடலங்காய் அறுவடை தீவிர மடைந்துள்ளது. விலை அதிகாரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சின்னமனூர் அருகே சீப்பாலக்கோட்டை, காமாட்சிபுரம், அழகாபுரி, ஓடைப்பட்டி, வெள்ளையம்மாள்புரம் அப்பிபட்டி, கன்னிசேர்வைபட்டி என பல கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் குட்டை மற்றும் நீள புடலங்காய் சாகுபடி செய்து வருகின்றனர். பொதுவாக குட்டை புடலங்காய் விதைப்பு செய்தால் 60 நாட்களில் செடியாக வளர்த்து அறுவடையோடு நிறைவடைந்து விடும். ஆனால் நீள புடலங்காய் சாகுபடி என்பது கொடியாக படரவிட்டு தொடர்ந்து 6 மாதம் வரையில் பலனை கொடுக்கும்.

ஏக்கருக்கு மருந்து அடிப்பு உரம் என 20 ஆயிரம் வரையில் செல்வு ஆகிறது.

தற்போது அந்த நீள மான புடலங்காய் பல இடங்களில் அபரிவிதமாக நல்ல

விளைச்சல் கண்டுள்ளது. கடந்த வாரம் வரையில் அறுவடை செய்து வரும் புடலங்காய்க்கு சின்னமனூர் ஏலச்சந்தையில் கிலோ 7 ரூபாய் தான் கிடைத்தது. தேவை அதிகரித்துள்ள நிலையில் தற்போது புடலங்காய்கு விலை அதிகரித்து நேற்று ஏலச்சந்தையில் கிலோ ரூ.15 ஆக உயர்ந்தது. வெளிமார்க்கெட்டில் தற்போது கிலோ விலை 28 ரூபாயாக விற்கப்படுகிறது. எப்போதும் சரியான விலைகிடைக்காத நிலையில் இப்போது விலை தீடீரென அதிகாரித்திருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**எலுமிச்சை விலை கிலோ ரூ.70க்கு விற்பனை**

**திருப்பூர், :** பழனி, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், மணப்பாறை, திருச்சி, மதுரை ஆகியப் பகுதிகளில் இருந்து எலுமிச்சை கொண்டு வரப்பட்டு திருப்பூரில் பூ மார்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த வருடம் மழை குறைவால் எலுமிச்சையின் விளைச்சல் குறைந்தது. இதனால் விலை அதிகரித்தது. கடந்த 2 வாரத்திற்கு முன் எலுமிச்சையின் விலை, மூட்டை ரூ.4 ஆயிரத்திற்கும், ஒரு கிலோ ரூ.30ல் இருந்து 35 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது. தற் போது எலுமிச்சை மூட்டைக்கு ரூ.6500க்கும், கிலோ ரூ.70ல் இருந்து 80 வரைக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், வருடந்தோறும் மார்ச் முதல் வாரத்தில் இருந்து எலுமிச்சையின் விலை அதிகரிக்க தொடங்கும்.

தற்போது பிப்ரவரியிலேயே எலுமிச்சை விலை அதிகரித்துள்ளது என்றனர்.

**பசுந்தேயிலை வார விலை உயரும்**

**குன்னூர், :**நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் பெரும்பாலான தேயிலை தூள் குன்னூரிலுள்ள அரசு மற்றும் தனியார் ஏல மையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இதில் விற்பனையாகும் தேயிலை தூளி ன் விலைக்கு ஏற்றார் போல் பசுந்தேயிலைக்கு உண்டான விலையை உற்பத்தியாளர்கள் நிர்ணயம் செய் து விவசாயிகளுக்கு வழங்குகின்றனர். கடந்த ஒரு மாதமாக உறைபனியின்

தாக்கத்தால் தேயிலை மகசூல் குறைந்துள்ளது. இதனால் ஏல மையங்களில் குளிர்கால தேயிலைக்கு அதிகளவில் கிராக்கி ஏற்பட்டுள்ளதால் குறிப்பிட்ட ரகங்களுக்கு கணிசமான விலை வழங்கப்படுகிறது.

அதனடிப்படையில் இந்த வாரம் பசுந்தேயிலைக்கு சாதாரண ரக பசுந்தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.14 முதல் ரூ.16, நடுத்தரத்திற்கு ரூ.110 முதல் ரூ.21, உயர் ரகத்திற்கு ரூ.24 முதல் ரூ.27 விலை வழங்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நாக்பூரில் தேசிய வேளாண்மை கண்காட்சி ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தொடங்கி வைத்தார்**



**நாக்பூர்,**

நாக்பூரில் 5 நாட்கள் நடக்கும் தேசிய வேளாண்மை கண்காட்சியை நேற்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தொடங்கி வைத்தார்.

தேசிய வேளாண்மை கண்காட்சி

மராட்டிய மாநிலம் நாக்பூரில் நேற்று ‘கிரிஷி வசந்த்’ என்று அழைக்கப்படும் தேசிய அளவிலான வேளாண்மை கண்காட்சி நேற்று தொடங்கியது. வருகிற 13–ந்தேதி வரை 5 நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தொடங்கி வைத்தார்.

இந்த கண்காட்சியில் நாடு முழுவதும் இருந்து 2 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொள்கின்றனர். 54 பயிர்களின் 307 வகைகள் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. கண்காட்சி தொடக்க விழாவில் மத்திய மந்திரி சரத் பவார், மராட்டிய முதல்–மந்திரி பிரிதிவிராஜ் சவான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பேசுகையில் கூறியதாவது:–

2–வது வேளாண் புரட்சி

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் விவசாயத்துறையில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. உணவு தானியங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு நம்மிடம் திறன் உள்ளது. புதிய பரிமாணங்கள் மற்றும் புதிய வழிமுறைகள் ஆகியவை விவசாயத்தில் அறிமுகப்படுத்தப்பட்டதால் உணவு பாதுகாப்பில் நாம் சாதனை படைத்து உள்ளோம். மேலும், உணவு தானியங்களை ஏற்றுமதி செய்வதில் சிறப்பான இடத்தில் இருக்கிறோம்.

இந்தியாவில் குறிப்பாக மேற்கத்திய மாநிலங்களில், உணவு தானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துகள் ஆகியவற்றின் உற்பத்தியில் ஏற்பட்டு உள்ள முன்னேற்றம், விவசாயிகளுக்கு கடன் வழங்குதல் ஆகியவற்றின் மூலம் நாட்டில் 2–வது வேளாண் புரட்சி ஏற்பட்டு உள்ளது என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு பிரணாப் முகர்ஜி பேசினார்.

உலக சாதனை

மத்திய விவசாயத்துறை மந்திரி சரத் பவார் பேசும் போது, " இந்த ஆண்டில் இந்தியா 263.2 மில்லியன் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்து புதிய சாதனை படைக்கும்" என்று நம்பிக்கை தெரிவித்தார்.

**நடப்பு பருவத்தில் மக்காச்சோளம் ஏற்றுமதி 31 சதவீதம் சரிவடையும்**



**புதுடெல்லி,**

நடப்பு பருவத்தில் (2013 நவம்பர்–2014 அக்டோபர்) மக்காச்சோளம் ஏற்றுமதி 31 சதவீதம் சரிவடைந்து 32 லட்சம் டன்னாக குறையும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது. கடந்த 2012–13 பருவத்தில் 46.70 லட்சம் டன் மக்காச்சோளம் ஏற்றுமதி செய்யப்பட்டதாக முதல் கட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

நம் நாட்டில் மிக முக்கியமாக கோழித்தீவனமாக மக்காச்சோளம் பயன்படுத்தப்படுகிறது. வெளிநாடுகளில் தேவைப்பாடு குறைந்ததால் மக்காச்சோளம் ஏற்றுமதி சரிவடையும் என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது. எனினும் இதனால் உள்நாட்டில் விலை நிலவரங்கள் பாதிக்கப்படாமல் நிலையாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது ஒரு டன் மக்காச்சோளம் விலை ரூ.11,640 முதல் ரூ.13,650 வரை உள்ளது. குறைந்தபட்ச ஆதரவு விலையை ஒரு டன்னுக்கு ரூ.13,100–ஆக மத்திய அரசு நிர்ணயம் செய்திருப்பதும் விலை நிலையாக இருப்பதற்கு முக்கிய காரணமாகும்.

சந்தை வட்டாரங்கள் அளித்துள்ள புள்ளிவிவரங்களின் அடிப்படையில், மத்திய அரசு சுமார் 4.50 லட்சம் டன் மக்காச்சோளம் கொள்முதல் செய்துள்ளதாக அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது. குறைந்தபட்ச ஆதரவு விலையில் ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து இந்த மக்காச்சோளம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன் 2009–10 பருவத்தில் அதிகபட்சமாக 3.29 லட்சம் டன் மக்காச்சோளத்தை மத்திய அரசு கொள்முதல் செய்தது.

**ஜாப்ராபாத் ஊராட்சியில் கால்நடை மருந்தக கட்டிடம் அமைச்சர் கே.சி.வீரமணி திறந்து வைத்தார்**



**வாணியம்பாடி,**

வாணியம்பாடியை அடுத்த ஜாப்ராபாத் ஊராட்சியில் கால்நடை மருந்தக கட்டிடம் திறப்பு விழா நடந்தது. ஊராட்சிமன்ற தலைவர் நஜ்மாகலீம் தலைமை தாங்கினார். துணைத்தலைவர் முபாரக்பேகம், ஒன்றியக்குழு உறுப்பினர் தாஜுன்னிசா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்விக்குழு உறுப்பினர் ரபீக்அகமத் வரவேற்று பேசினார். அமைச்சர் கே.சி.வீரமணி மருந்தகத்தை திறந்து வைத்து பேசினார்.

இதில் கோவி.சம்பத்குமார் எம்.எல்.ஏ., தாசில்தார் கீதாராணி, ஒன்றியக்குழு தலைவர் கோபால், துணைத்தலைவர் அண்ணாசாமி, மாவட்ட கவுன்சிலர்

ஜெயசக்தி, ஒன்றிய கவுன்சிலர் மணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் ஊராட்சி செயலர் ராஜேந்திரன் நன்றி கூறினார்.

**தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் இன்று வேளாண் கண்காட்சி-கருத்தரங்கம்**



**தர்மபுரி,**

தர்மபுரி கலெக்டர் அலு வலகத்தில் வேளாண் கண்காட்சி-கருத்தரங்கம் இன்று (திங்கட்கிழமை) தொடங்கி 17-ந்தேதி வரை 8 நாட்கள் நடக் கிறது.

கண்காட்சி

தமிழக முதல்-அமைச்சரின் அறிவிப்பின்படி விவசாயிகள் வேளாண் உற்பத்தியை இரு மடங்காக்கி, அதன் மூலம் 3 மடங்கு லாபத்தை பெறும் வகையில் வேளாண் தொடர் புடைய துறைகளின் சார்பில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் இன்று (திங்கட் கிழமை) தொடங்கி 17-ந்தேதி வரை தர்மபுரி கலெக்டர் அலு வலகத்தில் நடக்கிறது. இந்த கருத்தரங்கை உயர் கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப் பன் தொடங்கி வைக்கிறார். அதனை தொடர்ந்து வேளாண்மைத்துறை சார்பில் மக்காச்சோளம் சாகுபடி குறித்த சிறப்பு கருத்தரங்கம் நடக்கிறது.

நாளை (செவ்வாய்க் கிழமை) வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் மதிப் புக் கூட்டப்பட்ட வேளாண் பொருட்கள் கருத்தரங்கமும், வேளாண்

பொறியியல் துறை சார்பில் வேளாண் கருவிகள் பயன்பாடு மற்றும் அரசுத் திட்டங்கள் குறித்தும், நபார்டு வங்கி சார்பில் விவ சாயக்கடன் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கமும் நடை பெறுகிறது.

<u>கால்நடை வளர்ப்பு</u>

இதேபோன்று 12-ந்தேதி வேளாண் அறிவியல் மையத் தின் சார்பில் புதிய தொழில் நுட்பங்கள் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெறுகிறது. 13-ந்தேதி கால்நடை பராமரிப் புத்துறை சார்பில் கால்நடை வளர்ப்பு குறித்தும், 15-ந்தேதி மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் விவசாயிகள் தொழில் முனைவோர் வாய்ப்பு குறித் தும், பட்டுவளர்ச்சித்துறை சார்பில் பட்டுவளர்ச்சி விழிப் புணர்வு கருத்தரங்கமும், 16-ந் தேதி தோட்டக்கலைத்துறை சார்பில் காய்கறிகள் மற்றும் மலர்கள் சிறப்பு கருத்தரங்கமும் நடத்தப்படுகிறது. இந்த கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் விவேகானந்தன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**பாலேகுளி - விரும்பம்பட்டி ஏரிகளில் இருந்து புதிய கால்வாய்களில் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு**



**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி மாவட்டம் பாலேகுளி மற்றும் விரும் பம்பட்டி ஏரிகளிலிருந்து புதிதாக அமைக்கப்பட்ட கால்வாய்களில் பாசனத் திற்கு நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. மாவட்ட கலெக்டர் டி.பி.ராஜேஷ் திறந்து வைத்தார்.

<u>புதிய கால்வாய்கள்</u>

கிருஷ்ணகிரி அணையின் இடது புறக் கால்வாயினை நீட்டிப்பு செய்து பாலேகுளி ஏரியில் இருந்து சந்தூர் வரை உள்ள 28 ஏரிகளின் கீழ் உள்ள சுமார் 334 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற புதிய கால்வாய்கள் அமைக் கும் பணிகடந்த 10.05.2012 அன்று தொடங்கப்பட்டது. மேலும் போச்சம்பள்ளி வட்டம் பாரூர் ஏரியின் கிழக்குப் பிரதான கால்வாயின் கடைமடை ஏரியான விரும் பம்பட்டி ஏரியிலிருந்து பாலே தோட்டம் ஏரி மற்றும் 4 ஏரி கள், ஒரு குட்டை ஆகியவற்றின் மூலம் 83¾ ஹெக்டேர் நிலங் கள் பாசன வசதி பெறும் வகையில் கால்வாய் அமைக் கும் பணி கடந்த 8.03.2012 அன்று தொடங்கியது. இப் பணிகளை உள்ளாட்சித்துறை அமைச்சர் கே.பி.முனுசாமி தொடங்கி வைத்தார்.

<u>தண்ணீர் திறப்பு</u>

தற்போது இந்த 2 கால்வாய் கள் அமைக்கும் பணிகள் முடி வடைந்ததையடுத்து அந்த கால்வாய்களில் பாசனத்திற் காக நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. மாவட்ட கலெக்டர் டி.பி.ராஜேஷ் மதகை திறந்து வைத்தார்.இந்தநிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பால சுப்பிரமணியன், எம்.எல்.ஏ.க் கள் கிருஷ்ணமூர்த்தி, மனோ ரஞ்சிதம் நாகராஜ், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் அசோக்குமார், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் பெருமாள், சாந்தி தூயமணி, ஒன்றிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் தென்னரசு உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

<u>பாசன வசதி பெறும் கிராமங்கள்</u>

இதில் பாலேகுளி ஏரியில் புதியதாக அமைக்கப்பட்ட கால்வாய் மூலம் பாலேகுளி, நாகோஜனஹள்ளி, வீரமலை, விளங்காமுடி, வெப்பாலம் பட்டி மற்றும் காட்டாகரம் ஆகிய கிராமங்களில் உள்ள 334½ ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இதேபோல் விரும்பம்பட்டி ஏரியில் அமைக்கப்பட்ட கால் வாய் மூலம் பாரண்டப்பள்ளி, அயலம்பட்டி, கரடனூர், ஒட்டுக்கல்லனூர், திப்பம்பட்டி மற்றும் பாலேதோட்டம் ஆகிய கிராமங்களில் உள்ள 83¾ ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். இதை யொட்டி இப்பகுதி விவசாயி கள் தமிழக முதல்-அமைச்ச ருக்கு நன்றி தெரிவித்துள்ள னர்.

**கோபி வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.7¾ லட்சத்துக்கு வாழைப்பழம் ஏலம்**



**கோபி,**

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.7¾ லட்சத்துக்கு வாழைப்பழம் ஏலம் போனது.

<u>வாழைப்பழம் ஏலம்</u>

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாழைப்பழம் ஏலம் நடைபெற்றது. இதற்கு அந்தியூர், பவானி, ஈரோடு, பெருந்துறை, கள்ளிப்பட்டி, டி.என்.பாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து 200–

க்கும் மேற்பட்ட விவசாயிகள் மொத்தம் 6 ஆயிரம் வாழைப்பழ தார்களை ஏலத்துக்கு கொண்டு வந்து இருந்தனர்.இதில் நேந்திரம் பழம் (ஒரு கிலோ) 21 ரூபாய்க்கும், கதலி பழம் (ஒரு கிலோ) 30 ரூபாய் 80 காசுக்கும் ஏலம் போனது. பூவன் தார் ஒன்றுக்கு 380 ரூபாய்க்கும், செவ்வாழை தார் ஒன்று 660 ரூபாய்க்கும், மொந்தன் தார் ஒன்று 250 ரூபாய்க்கும், ரஸ்தாளி தார் ஒன்று 350 ரூபாய்க்கும், தேன்வாழை தார் ஒன்று 480 ரூபாய்க்கும், பச்சை நாடன் தார் ஒன்று 280 ரூபாய்க்கும், ரொபஸ்டா தார் ஒன்று 550 ரூபாய்க்கும் ஏலம் போனது.இந்த ஏலத்தில் வாழைப்பழம் மொத்தம் ரூ.7 லட்சத்து 80 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. சத்தியமங்கலம், திருப்பூர், கோவை ஆகிய பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் வாழைப்பழத்தை ஏலம் எடுத்து சென்றனர்.

தேங்காய் ஏலம்

தேங்காய் ஏலத்துக்கு கோபியை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து விவசாயிகள் 10 ஆயிரம் தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர். தேங்காய் ஒன்று குறைந்தபட்ச விலையாக 4 ரூபாய் 50 காசுக்கும், அதிகபட்ச விலையாக 16 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.1 லட்சத்துக்கு தேங்காய் விற்பனை ஆனது.அந்தியூர் மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் தேங்காயை ஏலம் எடுத்து சென்றனர். கடந்த வாரத்தை விட தேங்காயின் வரத்து குறைந்து இருந்ததால் விலை உயர்ந்து விற்பனையானது.

**குன்னூர் ஏல மையத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனை**



**குன்னூர்,**

குன்னூர் தேயிலை வர்த்தக அமைப்பின் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுத்து வருகின்ற னர்.விற்பனை எண் 6–க்கான ஏலம் கடந்த 6, 7–ந் தேதி நடை பெற்றது. ஏலத்திற்கு மொத்தம் 13 லட்சத்து 40 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 9 லட்சத்து 25 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 4 லட்சத்து 15 ஆயிரம் கிலோ டஸ்ட் ரக மாகவும் இருந்தது.

இந்த ஏலத்தில் 82 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. தேயிலை தூளின் விலையில் ஏற்றம், இறக்கம் இல்லாமல் கடந்த வார விலை யிலேயே ஏலம் சென்றது. சி.டி.சி. தேயிலை தூளின் அதிகபட்ச விலையாக 210 ரூபாயாக இருந்தது. ஆர் தோடக்ஸ் தேயிலை தூள் 260 ரூபாய் என அதிகபட்ச விலை யாக ஏலம் சென்றது.சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதா ரண வகை 58 ரூபாயில் இருந்து 61 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 110 ரூபாயில் இருந்து 180 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 68 ரூபாயில் இருந்து 73 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 130 ரூபாயில் இருந்து 190 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 7–க்கான ஏலம் வருகிற 13, 14 ஆகிய நாட்களில் நடக்கிறது. இந்த ஏலத்தில் 14 லட்சத்து 36 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

**காங்கயத்தில் கால்நடை மருத்துவ கல்லூரி அமைக்க வேண்டும்**

**என்.எஸ்.என்.நடராஜ் எம்.எல்.ஏ. பேச்சு**

காங்கயத்தில் கால்நடை மருத்துவ கல்லூரி அமைக்க வேண்டும் என்று என்.எஸ்.என்.நடராஜ் எம்.எல்.ஏ. பேசினார்.

கால்நடை கண்காட்சி

திருப்பூர் மாவட்டம் காங்கயத்தில் கால்நடைகளை கண்காட்சி, கருத்தரங்கம் நடைபெற்றது. சிறந்த காளைகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. விழாவில் என்.எஸ்.என்.நடராஜ் எம்.எல்.ஏ. பேசியதாவது:-

உலக புகழ் பெற்ற காங்கயம் இன காளைகள் இன்று அழிந்து வரும் நிலையில் உள்ளது. இந்த கால்நடைகளை காப்பாற்ற வேண்டும் என பல்வேறு தரப்பு மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பாக விவசாயிகள் மத்தியில் இந்த கோரிக்கை அதிகப்படியாக எழுந்துள்ளது.

இந்த கால்நடைகளை காப்பாற்றும் முதல் நடவடிக்கையாக முதல்-அமைச்சரின் ஆணைப்படி இங்கு இந்த கால்நடைகளுக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடத்தப்பட்டுள்ளது. கம்பீரத்திற்கும் உழைப்பிற்கும் பெயர் போன இந்த காளைகளை பார்க்கும் வடநாட்டினர் மட்டுமல்லாமல் பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் இந்த இன காளைகளை அதிக விலை கொடுத்து வாங்கி செல்கின்றனர்.

கால்நடை கல்லூரி அமைக்க கோரிக்கை

அப்படிப்பட்ட காங்கயம் இன காளைகளுக்கு சொந்தமான இந்த காங்கயம் மண்ணில் கால்நடை ஆராய்ச்சி மையமும், கால்நடை மருத்துவ கல்லூரியும் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், காங்கயம் கால்நடைகளை காப்பாற்றும் நடவடிக்கையாக இந்த இனம் உலகம் எங்கும் பரவும் வகையில் இந்த இன காளைகளின் விந்துவை, கால்நடை மருத்துவமனைகளில் வைத்து மற்ற கால்நடைகளுக்கு சினையூட்டும் படி செய்யவேண்டும்.

அப்படி செய்தால் காங்கயம் இன காளைகள் மற்ற இடங்களிலும் பெருகி இந்த இனம் காப்பாற்றப்படும். காங்கயம் நகரில் காளைமாட்டு சின்னம் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த சின்னம் விரைவில் வைக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா பேசியதாவது:-

ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு

தமிழகத்தில் பின் தங்கியிருந்த கால்நடை பராமரிப்பு துறை இன்று மற்ற துறைகளுடன் போட்டி போடும் அளவுக்கு வளர்ந்துள்ளது. எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில் இந்த ஆண்டு கால்நடை பராமரிப்பு துறைக்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தளவுக்கு முதல்-அமைச்சர் கால்நடைகளை காப்பாற்றும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

காங்கயம் காளை இனம் காப்பாற்றப்பட வேண்டும். அதற்காக இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார். இந்த கோரிக்கை பற்றி முதல்வரிடம் எடுத்து சொல்வேன், நிச்சயம் அவரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். அவர் இதை பற்றி ஆராய்ந்து நிச்சயம் நடவடிக்கை எடுப்பார்.

இவ்வாறு அவர் பேசினார்.

**திருவோணம் பகுதியில் விவசாயிகளிடம் கரும்பு கொள்முதல் பணி மும்முரம் மாவட்ட கலெக்டருக்கு விவசாயிகள் பாராட்டு**

**திருவோணம்,**

திருவோணம் பகுதியில் விவசாயிகளிடம் கரும்பு கொள்முதல் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. இதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொண்ட தஞ்சை மாவட்ட கலெக்டர் என்.சுப்பையனுக்கு விவசாயிகள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

<u>கரும்பு கொள்முதல்</u>

திருவோணம் ஒன்றியம் வெங்கரை பகுதியில் கரும்பு பயிரிட்டு அறுவடை செய்யப்பட்ட கரும்புகளையும், அதேபோல் அறுவடைக்கு தயரான நிலையிலுள்ள கரும்புகளையும் கொள்முதல் செய்வதில் குருங்குளம் சர்க்கரை ஆலை நிர்வாகம் காலதாமதம் செய்வதாகவும், இதனால் கரும்பின் சர்க்கரை அளவு குறைந்து விவசாயிகளுக்கு பொருளாதார சேதம் ஏற்படுவதாக கூறி அப்பகுதி விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

இதுபற்றிய தகவல் தஞ்சை மாவட்ட கலெக்டர் என்.சுப்பையனுக்கு நேற்று காலை தெரியவந்தது. இதனை தொடர்ந்து குருங்குளம் சர்க்கரை ஆலையின் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்ட மாவட்ட கலெக்டர் சுப்பையன் நடவடிக்கை மேற்கொண்டு விவசாயிகளிடம் தயார் நிலையிலுள்ள அறுவடை கரும்புகளை கொள்முதல் செய்யும் பணிகளை உடனடியாக விரைவுபடுத்துமாறு உத்தரவிட்டார்.

<u>கலெக்டருக்கு பாராட்டு</u>

அதன்படி அடுத்த சில மணிநேரங்களில் வெங்கரை பகுதிக்கு விரைந்து சென்ற சர்க்கரை ஆலை அதிகாரிகள் அறுவடை கரும்புகளை கொள்முதல் செய்யும் பணிகளை விரைவாக தொடங்குவதாக சம்மந்தப்பட்ட விவசாயிகளிடம் உறுதியளித்தனர்.

ளமேலும் அப்பகுதிக்கு விரைவாக வரவழைக்கப்பட்ட கனரக வாகனங்களில் கொள்முதல் கரும்புகள் ஏற்றப்பட்டு ஆலைக்கு கொண்டு செல்லும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. இவ்விசயத்தில் உடனடி நடவடிக்கை மேற்கொண்ட தஞ்சை மாவட்ட கலெக்டர் என்.சுப்பையனுக்கு இப்பகுதி விவசாயிகளின் நன்றியுடன் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் 2¼ லட்சம் டன் நெல் கொள்முதல் அதிகாரி பேட்டி



**குடவாசல்,**

திருவாரூர் மாவட்டத்தில் 2¼ லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி கூறினார்.

கொள்முதல் நிலையம் ஆய்வு

குடவாசல் அருகே உள்ள மேலராமன்சேத்தி கிராமத்தில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு தற்போது பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தங்கள் வயலில் விளைந்த நெல்லை விற்று வருகிறார்கள். இதையடுத்து அந்த நிலையத்தில் நெல் கொள்முதல் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இங்கு நடைபெறும் நெல் கொள்முதல் பணிகளை நேற்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக திருவாரூர் மண்டல முதுநிலை மேலாளர் அழகிரிசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். விவசாயிகள் கொண்டு வரும் நெல், கொள்முதல் செய்யும் முறை, அளவு முறை உள்ளிட்டவற்றை ஆய்வு செய்தார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

நெல்லுக்குரிய தொகை

திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு நிதி ஆண்டில் புதிதாக 30 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. நிலையங்களில் நடைபெறும் நெல் கொள்முதல் பணிகள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. நெல் கொள்முதல் நிலையங்களுக்கு தேவையான சாக்குகள் அனுப்பப்படும். விவசாயிகள் அவர்கள் விற்ற நெல்லுக்குஉரிய தொகை உடனடியாக கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த கொள்முதல் நிலையத்தில் அதிகளவு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருவதால், உடனுக்குடன் நெல் மூட்டைகளை குடோனுக்கு அனுப்புவதற்கு தேவையான லாரிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நெல்லை விற்பதிலும், அதற்குரிய பணத்தை பெறுவதில் விவசாயிகளுக்கு எவ்வித சிரமும் இல்லாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நடப்பு பருவத்தில் திருவாரூர் மாவட்டத்தில் 2 லட்சத்து 28 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**நீடாமங்கலத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு அரவை பணிக்காக 2 ஆயிரம் டன் நெல், அரிசி ரெயிலில் அனுப்பப்பட்டது**



**நீடாமங்கலம்,**

நீடாமங்கலம் ரெயில் நிலையத்தில் இருந்து நேற்று ஒரே நாளில் 2 ஆயிரம் டன் நெல் மற்றும் அரிசி அரவை பணிக்காக சரக்கு ரெயில் மூலம் வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## நெல் அரவை பணி

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருகே பாமணியில் உள்ள கிடங்கில் இருந்து ஆயிரம் டன் சன்னரக அரிசி சரக்கு ரெயில் மூலமாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லும் பணி நேற்று நடந்தது. இதேபோல் நேரடி கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட ஆயிரம் டன் நெல் அரவைப் பணிகளுக்காக நெல்லை மாவட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த 2 பணிகளும் நேற்று ஒரே நாளில் நடந்தன.

ஒரே நாளில் 2 ஆயிரம் டன் நெல் ஆகியவற்றை நீடாமங்கலத்தில் இருந்து சரக்கு ரெயிலில் வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவது இதுவே முதல் முறை என்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக திருவாரூர் முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி தெரிவித்தார்.

இதுபற்றி அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

## ஒரே நாளில் 2 ஆயிரம் டன்

திருவாரூர் மாவட்டத்தில் 428 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்களில் தற்போது நெல் கொள்முதல் பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. சரக்கு ரெயிலில் வழக்கமாக 29 பெட்டிகளில் தான் நெல் மற்றும் அரிசி வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். ஆனால் நேற்று ஒரே நாளில் 58 பெட்டிகளில் 2 ஆயிரம் டன் நெல், அரிசி கொண்டு செல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

2 ஆயிரம் டன் நெல், அரிசியை நீடாமங்கலம் ரெயில் நிலையத்திற்கு எடுத்து வரும் பணியில் 180 லாரிகள் பயன்படுத்தப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்ட 1000 டன் சன்னரக அரிசி, மன்னார்குடி பாமணி கிடங்கில் இருந்து எடுத்து வரப்பட்டதாகும். நெல்லைக்கு அரவைப்பணிகளுக்காக கொண்டு செல்லப்பட்ட 1000 டன் நெல், மாவட்டத்தின் திறந்த வெளி நெல் சேமிப்பு

கிடங்குகளில் இருந்து எடுத்து வரப்பட்டவை ஆகும். இவ்வாறு அவர் கூறினார். நேற்று 180 லாரிகளில் 2 ஆயிரம் டன் அரிசி, நெல் ரெயில் நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டதால், நீடாமங்கலம் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

**பெண்ணாடம் அருகே உள்ள பெலாந்துறை அணைக்கட்டை சீரமைக்க ரூ.17½ கோடி நிதி ஒதுக்கீடு**



**விருத்தாசலம்,**

பெண்ணாடம் அருகே உள்ள பெலாந்துறை அணைக்கட்டு ரூ.17½ கோடி செலவில் சீரமைப்பு செய்யப்பட உள்ளது. இதற்கான டெண்டர் விடும் பணி கடலூரில் 12-ந்தேதி நடைபெற இருக்கிறது.

ஆங்கிலேயர் காலத்து அணை

சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதியில் இருந்து உற்பத்தியாகி கடலூர் மாவட்டம் பெண்ணாடம் வழியாக ஓடுகிறது வெள்ளாறு. இதில் பெண்ணாடம் அருகே பெலாந்துறையில் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு (தடுப்புஅணை) கட்டப் பட்டுள்ளது.

கடந்த 1876ம் ஆண்டு ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இந்த தடுப்பு அணையானது தற்போது வரையில் கம்பீரமாக காட்சி அளிக்கிறது. 200.80 மீட்டர்

நீளமும், 6 அடி அகலமும் கொண்ட இதில் 17 பெரிய மதகுகளும் அமைக்கப்பட்டுள்ளது.

<u>12 ஆயிரம் ஏக்கர்</u>

பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த அணையை நம்பி பெலாந்துறை, கிழிமங்கலம், மோத்தமட்டை, ராஜேந்திரப்பட்டினம், ஸ்ரீமுஷ்ணம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் உள்ள சுமார் 12 ஆயிரத்து 234 ஏக்கர் விளைநிலம் பாசன வசதி பெற்று வருகிறது. பாசனத்திற்கென தனியே 5 கதவணைகள் (ஷட்டர்) வாயிலாக தண்ணீர் வெளியேற்றப்படும்.

<u>ரூ.17½ கோடி ஒதுக்கீடு</u>

அணைகட்டப்பட்டு சுமார் 125 ஆண்டுகளுக்கு மேல் ஆவதன் காரணமாகவும், போதியஅளவிற்கு பராமரிப்பு இன்மையாலும் அணைகட்டில் ஆங்காங்கே விரிசல் ஏற்பட்டுள்ளது. இது மேலும் சேதமானால் வரும் ஆண்டு பருவமழையின் போது, அணையில் தேக்கி வைக்கப்படும் தண்ணீர் வெளியேறி வீணாகும் நிலை உள்ளது.

இதை அடுத்து அதிகாரிகள் அணைக்கட்டை சீரமைக்க செய்ய முடிவு செய்தனர். இதற்கென நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.17.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில் தொடங்கப்பட இருக்கும் இந்த பணிக்கான டெண்டர் அறிவிப்பானது கடலூரில் நடைபெற உள்ளது.

இது தொடர்பாக பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, பெலாந்துறை அணைக்கட்டை சீரமைக்க ரூ. 17½ கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான டெண்டர் அறிவிப்பானது கடலூர் வெள்ளாறு வடிநிலவட்டம் கண்காணிப்பு பொறியாளர் அலுவலகத்தில் வருகிற 12-ந்தேதி நடைபெற இருக்கிறது என்றார்.

## காட்டு யானைகளால் பயிர்கள் சேதம்: 134 விவசாயிகளுக்கு ரூ.21½ லட்சம் இழப்பீட்டு தொகை அமைச்சர் மோகன் வழங்கினார்



கள்ளக்குறிச்சி அருகே இந்திலி கிராமத்தில் நடந்த விழாவில் பயனாளி ஒருவருக்கு இழப்பீட்டு தொகைக்கான காசோலையை அமைச்சர் மோகன் வழங்கியபோது எடுத்தபடம். அருகில் கலெக்டர் சம்பத், அழகுவேல் பாபு எம்.எல்.ஏ., திட்ட இயக்குனர் முத்துமீனாள் ஆகியோர் உள்ளனர்.

**கள்ளக்குறிச்சி,**

காட்டு யானைகளால் பயிர்கள் சேதமடைந்த 134 விவசாயிகளுக்கு ரூ.21½ லட்சம் இழப்பீட்டு தொகையை அமைச்சர் மோகன் வழங்கினார்.

<u>கடன் உதவி வழங்கும் விழா</u>

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், சின்னசேலம், கல்வராயன் மலை, கச்சிராயப்பாளையம் பகுதியில் கடந்த ஆண்டு காட்டு யானைகள் புகுந்தது. இவை கரும்பு, வாழை, நெல் பயிர்களை மேய்ந்து நாசம் செய்தது. இதனால் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்கும் விழா இந்திலியில் உள்ள ஆர்.கே.எஸ். கல்லூரி வளாகத் தில் நடைபெற்றது.

விழாவுக்கு மாவட்ட கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார். கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அழகுவேல் பாபு, மாவட்ட திட்ட இயக்குனர் முத்து மீனாள், ஒன்றியக்குழு தலைவர் ராஜசேகர், நகர்மன்ற தலைவர் பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கள்ளக்குறிச்சி மாவட்ட வன அலுவலர் ஜெயபாலன் வரவேற்றார்.

<u>அமைச்சர் மோகன்</u>

விழாவில் ஊரக தொழில்துறை அமைச்சர் ப.மோகன் சிறப்பு அழைப் பாளராக கலந்துகொண்டு, காட்டு யானைகளால் பாதிக் கப் பட்ட 134 விவசாயிகளுக்கு ரூ.21 லட்சத்து 40 ஆயிரம் இழப்பீட்டு தொகைக்கான காசோலைகளை வழங்கி னார்.

மேலும் ஏரி கருவேல மரங்களுக்கு ஏல பங்கு தொகையாக 4 ஊராட்சி களுக்கு ரூ.11 லட்சத்து 30 ஆயிரம், தனிநபர் கடன் உதவியாக 150 பேருக்கு ரூ.27 லட்சத்து 90 ஆயிரம் என மொத்தம் 288 பயனாளிகளுக்கு ரூ.60 லட்சத்து 60 ஆயிரத்துக் கான காசோலைகள் வழங்கப் பட்டது. வரதப்பனூரில் 17 ஏக்கரில் மரக்கன்று நட்டு சிறப்பாக வளர்த்து வரும் ஊராட்சிமன்ற தலைவர் தேவேந்திரனை பாராட்டி அமைச்சர் மோகன் கேடயம் வழங்கினார்.

ரூ.2–க்கு ஒரு கிலோ வைக்கோல்

விழாவில் கள்ளக்குறிச்சி உதவி கலெக்டர் குணசேகர், ஒன்றியக்குழு தலைவர்கள் ராஜேந்திரன், அரசு, அ.தி.மு.க. நகர செயலாளர் பாபு, வனச்சரக அலுவலர்கள் கொளஞ்சியப்பா, ரவி, ஞானசேகரன, வட்டார வளர்ச்சி அலுவலர் ராமசாமி மற்றும் வனத்துறை அலு வலர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக கள்ளக்குறிச்சி கால்நடைத்துறை பராமரிப்பு உதவி இயக்குனர் அலுவலகத் தில் நடந்த விழாவில் ரூ.2–க்கு ஒரு கிலோ வைக்கோல் வழங்கும் திட்டத்தை அமைச்சர் ப.மோகன் தொடங்கி வைத்தார். இதில் மண்டல இணை இயக்குனர் தேவராஜ், துணை இயக்குனர் அப்சல், உதவி இயக்குனர் ராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**மூங்கில்துறைப்பட்டு பகுதியில் கால்வாய் ஆக்கிரமிப்பால் சாத்தனூர் அணை தண்ணீர் ஏரிகளுக்கு வருவதில் தாமதம்**



**மூங்கில்துறைப்பட்டு,**

மூங்கில்துறைப்பட்டு பகுதியில் கால்வாயில் செடி, கொடிகள் ஆக்கிர மிப்பால் சாத்தனூர் அணையில் திறக்கப் பட்ட தண்ணீர் மூங்கில் துறைப்பட்டு பகுதி ஏரிகளுக்கு தாமதமாக வருகிறது.

<u>சாத்தனூர் அணை</u>

விழுப்புரம் மாவட்டம் மூங்கில்துறைப்பட்டு, ரிஷிவந்தியம், சங்கராபுரம் பகுதி விவசாய பாசனத்துக்காக கடந்த 6–ந் தேதி திரு வண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் அணை வலதுபுற கால்வாய் மற்றும் தென் பெண்ணையாற்றில் தண்ணீர் திறக்கப்பட்டது.

இந்த தண்ணீர் திரு வண்ணாமலை மாவட்டம் வழியாக நேற்று முன்தினம் மூங்கில்துறைப்பட்டு பகுதிக்கு வந்தது. கால்வாயில் ஆங் காங்கே ஏற்பட்டுள்ள உடைப்பு, செடி கொடிகளின் ஆக்கிரமிப்புகளால் தண்ணீர் தாமதமாக வருகிறது. இதனால் சங்கராபுரம் தாலு காவில் சாத்தனூர் வலதுபுற கால்வாயை நம்பியுள்ள 48 ஏரிகள் நிரம்புவதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. மேலும் 4,664 ஏக்கர் விவசாய நிலமும் தண்ணீர் இன்றி வறண்டு போகும் நிலை உள்ளது.

<u>செடி கொடிகள் ஆக்கிரமிப்பு</u>

இதுபற்றி மூங்கில்துறைப் பட்டு பகுதி விவசாயிகள் கூறுகையில், சாத்தனூர் கால்வாயில் தண்ணீர் திறப் பதற்கு முன்பே கால் வாய் களை தூர்வாரி சீரமைக்க பொதுப்பணித்துறை அலு வலர்களிடம் தெரி வித்தோம். ஆனால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளாததால் செடி, முட்புதர்களின் ஆக்கிர மிப்பால் கால்வாயில் தண்ணீர் குறைவாகவும், தாமதமாகவும் வருகிறது. இதனால் ஒவ்வொரு ஏரிகளாக நிரம்பி அடுத்தடுத்த ஏரிகளுக்கு குறித்த காலத்தில் தண்ணீர் வருவது சந்தேகம் தான் என்றனர்.

மூங்கில்துறைப்பட்டு பகுதியில் ஆண்டுதோறும் சாத்தனூர் அணை வலதுபுற கால்வாயை நம்பி விவசாயம் செய்யப்படுகிறது. ஆனால் கால்வாயை பராமரித்து அகலப்படுத்த அலுவலர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை என்று விவசாயிகள் தரப்பில் புகார் கூறப்படுகிறது. எனவே இனி வரும் காலங்களில் கால்வாயை சீரமைத்து, வேகமாக தண்ணீர் வர பொதுப் பணித்துறை அலு வலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**திருச்சி மாவட்டத்தில் மானிய விலையில் வைக்கோல் வினியோகிக்க விண்ணப்பிக்கலாம் கலெக்டர் தகவல்**



**திருச்சி,**

திருச்சி மாவட்டத்தில் மானிய விலையில் வைக்கோல் வினியோகிக்க விண்ணப்பிக்கலாம்.

இது குறித்து கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:–

வைக்கோல் வினியோகம்

திருச்சி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறை மூலம் வறட்சி நிவாரண திட்டத்தில் கால்நடைகளுக்கு மானிய விலையில் வைக்கோல் வழங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. முதல்–அமைச்சர் ஜெயலலிதா, கால்நடைகளுக்கு உலர் வைக்கோல் தீவனத்தை மானிய விலையில் வழங்க ரூ.12½ கோடி முதல் கட்டமாக அனைத்து மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்துள்ளார். அதன்படி, ஒரு கிலோ வைக்கோல் ரூ.2 என்ற மானிய விலையில் ஒரு மாட்டிற்கு ஒரு நாளைக்கு 3 கிலோ வீதம் அதிகபட்சம் 5 மாடுகளுக்கு வாராந்திர தேவையின் அடிப்படையில் வாரம் ஒரு முறை தொடர்ச்சியாக 2 முதல் 3 மாதங்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போர் தங்களது குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட்டு அளவு புகைப்படம் 2 நகல், கால்நடைகளின் இருப்பு விபரம் ஆகியவற்றை அருகில் உள்ள அரசு கால்நடை மருந்தகங்களில் கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்தவர்களுக்கு விரைவில் “கால்நடை தீவனம் வழங்கும் அட்டை“ வழங்கப்படும். இத்திட்டத்தின்படி, மணிகண்டம், வளநாடு, மண்ணச்சநல்லூர், தண்டலைபுத்தூர் கால்நடை மருந்தக வளாகத்தில் உலர் தீவன கிடங்குகள் அமைக்க ரூ.40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விலைப்புள்ளிகள்

இந்த தீவன கிடங்குகளுக்கு தனித்தனியாக உலர்ந்த வைக்கோல் வாங்கி, கட்டுகளாக கட்டி, வண்டியில் ஏற்றி குறிப்பிட்ட இடங்களில் இறக்கி, அடுக்கி

போர் போட்டு தந்து வாரம் 10 டன் வீதம் தொடர்ந்து 2 முதல் 3 மாதங்களுக்கு வழங்க விருப்பம் உள்ளவர்கள் ஒரு கிலோ வைக்கோல் விலையை குறிப்பிட்டு மூடி முத்திரையிடப்பட்ட போட்டி விலைப்புள்ளியினை கொடுக்கலாம். இத்திட்டத்திற்கு வினியோகிக்கப்படும் செய்யப்படும் வைக்கோல் ஈரமில்லாததாகவும், உலர்ந்ததாகவும் இருக்க வேண்டும். தரம் இல்லாத வைக்கோல் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும் வழங்கல் ஆணை பெற்ற விவசாயிகள் 10 நாட்களுக்குள் வினியோகத்தை தொடங்க வேண்டும்.

எனவே வைக்கோல் வினியோகம் செய்ய விரும்பும் விவசாயிகள் வருகிற 12–ந்தேதி பிற்பகல் வரை மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளியினை திருச்சி கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகம், கோழிப்பண்ணை வளாகம், புதுக்கோட்டை மெயின் ரோடு, திருச்சி என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் “வைக்கோல் விலைப்புள்ளி“ பெட்டியிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். இந்த விலைப்புள்ளிகள் 14–ந் தேதி பிற்பகல் கலெக்டர் முன்னிலையில் திறக்கப்பட்டு குறைந்த போட்டி விலைப்புள்ளி கோரியவர்களுக்கு வழங்கல் ஆணைகள் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் மின்மோட்டார்**

**பொன்னமராவதி,**

பொன்னமராவதி ஒன்றிய அலுவலக வளாகத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் மூலம் உணவு உற்பத்தியை பெருக்குவதற்காக மானிய விலையில் 36 விவசாயிகளுக்கு மின்மோட்டார் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு ஆத்மா திட்டத் தலைவர் காசிகண்ணப்பன் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயபாலன் வரவேற்றார். புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக் குநர் ஷாஜகான் 36 விவசாயி களுக்கு மின் மோட்டார்களை வழங்கி

சிறப்புரை யாற்றினார். மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் நாகேந்திரன் மத்திய அரசின் திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார். முடிவில் வேளாண்மை அலு வலர் ரமேஷ் நன்றி கூறி னார்.

**விருதுநகர் மார்க்கெட் நிலவரம்: பாசிப்பருப்பு, பாமாயில் விலை உயர்வு சீனி, வத்தல் விலை குறைந்தது**



**விருதுநகர்,**

விருதுநகர் மார்க்கெட் டில் பாசிபருப்பு, பாமா யில் ஆகியவற்றின் விலை உயர்ந்து உள்ள நிலை யில், சீனி, வத்தல் விலை குறைந்துள்ளது.

உளுந்து

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடை ரூ.4,600 முதல் ரூ.5,300 வரையிலும், உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.5,600 முதல் ரூ.7,100 வரையிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.5,300 முதல் ரூ.5,500 வரையிலும் விற்பனை ஆனது. துவரை 100 கிலோ மூடை ரூ.4,000 முதல் 4,600 வரையிலும், துவரம் பருப்பு ரூ.5,700 முதல் ரூ.6,900 வரையிலும் விற்பனை ஆனது. பாசிப்பயறு 100 கிலோ மூடை ரூ.200 விலை உயர்ந்து ரூ.7,200 முதல் ரூ.7,400 வரையிலும், பாசிப் பருப்பு 100 கிலோ மூடை ரூ.9,400 முதல் ரூ.9,600 வரையிலும் விற்பனை செய் யப்பட்டது.

மல்லி லயன் ரகம் ரூ.3,400 முதல் ரூ.3,500 வரை விற்பனை ஆனது. வத்தல் விலை குவிண் டாலுக்கு ரூ.500 விலை குறைந்து சம்பா ரகம் குவிண்டால் ரூ.5,800 முதல் ரூ.6,500 வரையிலும், ஏ.சி. வத்தல் ரூ.7,100 முதல் ரூ.7,500 வரையிலும், முண்டு வத்தல் ரூ.4,000 முதல் ரூ.5,700 வரையிலும், சோடை வத்தல் ரூ.1,500 முதல் ரூ.1,700 வரையிலும் விலை சொல்லப்பட்டது.

சமையல் எண்ணை

விருதுநகர் எண்ணை மார்க்கெட்டில் கடலை எண்ணை 15 கிலோ 1,250 ஆகவும், தேங்காய் எண்ணை ரூ.1,605 ஆக வும், சூரியகாந்தி எண்ணை ரூ.1200 ஆகவும் விற்பனை ஆனது. நிலக்கடலை பருப்பு ரூ.3,600 ஆகவும், கடலை புண்ணாக்கு 100 கிலோ ரூ.3,000 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.2,740 ஆகவும் விற்பனை ஆனது. பாமாயில் 15 கிலோவுக்கு ரூ.15 விலை உயர்ந்து ரூ960 ஆக விற்பனை செய்யப்பட்டது. நல் லெண்ணை 15 கிலோ ரூ.4,615 ஆக விற்பனை செய்யப்பட் டது.

சீனி

விருதுநகர் சீனி மார்க்கெட்டில் சீனி குவிண்டாலுக்கு ரூ.25 விலை குறைந்து ரூ.2950 ஆகவும், கொண்டைக்கடலை குவிண்டால் ரூ.3,100 ஆகவும், பொரி கடலை 55 கிலோ ரூ.2,400 ஆகவும், பட்டாணி 100 கிலோ ரூ.2,950 ஆகவும், பட்டாணி பருப்பு ரூ.3,150 முதல் ரூ.3,325 வரையிலும், மசூர் பருப்பு ரூ.4,500 முதல் ரூ.4,600 வரையிலும், ரவை 90 கிலோ ரூ.3,030 ஆகவும், மைதா 90 கிலோ ரூ.3,030 ஆகவும் விற்பனை ஆனது.

காபி

விருதுநகர் காபி மார்க்கெட்டில் காபி பிளாண்டேசன் பிபி ரகம் 50 கிலோ ரூ.8,900 ஆக வும், ஏ ரகம் ரூ.9,900 ஆகவும், சி ரகம் ரூ.7,800 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.6,300 ஆகவும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.5,750 ஆகவும் விற்பனை ஆனது.

## தேசிய அளவிலான வேளாண் கண்காட்சிக்கு 109 விவசாயிகள் பயணம் கலெக்டர் வழி அனுப்பி வைத்தார்



நாக்பூரில் நடக்கும் தேசிய அளவிலான வேளாண் கண்காட்சிக்கு செல்லும் விவசாயிகளை மாவட்ட கலெக்டர் ஹரிஹரன் அடையாள அட்டை அணிவித்து வழி அனுப்பி வைத்த போது எடுத்த படம். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் முத்துசாமி உள்ளார்.

**விருதுநகர்,**

நாக்பூரில் நடக்கும் தேசிய அளவிலான வேளாண் கண்காட்சிக்கு விருதுநகர் மாவட்டத்தில் இருந்து 109 விவசாயிகளைகலெக் டர் ஹரிஹரன் வழி அனுப்பி வைத்தார்.

வேளாண் கண்காட்சி

வேளாண்மைத்துறை சார் பில் விருதுநகர் மாவட்ட விவ சாயிகள் 109 பேர் மகா ராஷ் டிரா மாநிலம் நாக்பூரில் உள்ள மத்திய பருத்தி ஆரா ய்ச்சி நிலையத்தில் நடைபெற உள்ள க்ருஷி வசந்த் என்ற தேசிய அளவிலான வேளாண் கண் காட்சிக்கு அழைத்து செல்லப் படுகின்றனர். பட்டறி வுப் பய ணம் செல்லும் விவ சாயி களுக்கு மாவட்ட கலெக் டர் அலுவலகத்தில் பயணத் திற் கான ஆயத்த கூட்டம் நடை பெற்றது. இதில் மாவட்ட கலெக்டர் ஹரிஹரன் கலந்து கொண்டு பட்டறிவு பயணம் செல்லும் விவசாயிகள் கண் காட்சியில் இடம் பெற்றுள்ள கருத்துக்களை கற்று பயனடை யுமாறு கூறினார்.

உற்பத்தியை...வேளாண்மை இணை இயக்குனர் சுப்பையா கண் காட்சியானது வேளாண் உற் பத்தியை அதிகப்படுத்து வதற்கு உறுதுணையாக இருக் கும் என்றும் இதனை விவசாயி கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

மாவட்ட கலெக்டரின் நேர் முக உதவியாளர் (பொ) செண் பகராஜ் கண்காட்சியில் இடம் பெற உள்ள வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்நுட் பங்கள், செயல் விளக்கங்கள், விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் பற்றி விரிவாக கூறினார். மேலும் கண்காட்சி வேளாண் பெருமக்களுக்கு ஒரு வரபிரசா தம் என்றும் இதனை பய னுள்ளதாக்கி கொள்ளுமாறும் கூறினார்.

வழி அனுப்பி

மேலும் விவசாயிகளுக்கு ரெயில் பயணம் மற்றும் நாக் பூருக்கு சென்று பின்னர் கடை பிடிக்க வேண்டிய வைகள் பற்றியும் விரிவாக கூறப்பட் டது. பின்னர் வெளி மாநில பட்டறிவுப் பயணம் செல்லும் விவசாயிகளுக்கு அடையாள அட்டையினை வழங்கி மாவட்ட கலெக்டர் ஹரிஹரன் அவர்களை வழி அனுப்பி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் முனுசாமி, மாவட்ட கலெக் டரின் நேர் முக உதவியாளர் (பொது) கொங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மருத்துவ குணம் மிக்க `தவுண்': தென்காசி பகுதியில் விற்பனை மும்முரம்



பனம் பழத்தின் கொட்டையிலிருந்து கிடைக்கும் அபூர்வ உணவுப்பொருளான தவுண், தென்காசி பகுதியில் மும்முரமாக விற்பனை செய்யப்படுகிறது. ஆண்டில்

ஒருசில மாதங்களில் மட்டுமே உண்ணக் கிடைக்கும் தவுண், மிகுந்த மருத்துவ குணமிக்கது.

**கர்ப்பகதருகு**

மரங்களில் கர்ப்பகதருகு என அழைக்கப்படும் பனைமரம், தமிழரின் வாழ்வில் ஒரு அங்கமாகவே இருந்துள்ளது. பனை மரத்தின் வேர் முதல் மரத்தின் உச்சி வரை அனைத்து பொருட்களும் மக்களுக்கு பயன் தரும். வறட்சியான பகுதியில் தானாக வளரக்கூடிய பனையின் ஆயுள் 100 ஆண்டுகள். 90 அடி உயரம் வளரக்கூடியது.

பனங்கருக்கு என்று சொல்லப்படும், சிறு மரங்களை உடைக்கும் போது, அதில் கிடைக்கும் பச்சைக் குருத்து உண்ண சுவையாகவும், சத்தானதாகவும் இருக்கும். வீடுகள் வேயவும், படுக்கவும், உட்காரவும், பண்டங்கள் கட்டுவதற்கும் தேவையான பாய்கள் செய்ய பனை ஓலை பயன்படுகிறது.

கடுமையான வறட்சி காலங்களில் கால்நடைகளுக்கு தீவனமாக பனை ஒலைகள் கொடுக்கப்பட்டு வந்தது. பனை ஓலையில் செய்யப்பட்ட விசிறிகள் குளுமையான காற்று தருபவை.

**இயற்கை கள்**

பனைமர பாளையிலிருந்து பதநீர் கிடைக்கிறது. அதில் சுண்ணாம்பு கலக்காமல் விட்டால், அது சுவையானதாகவும், இயற்கையான, 'கள்' என்ற பானம் கிடைக்கும். பனங்காய்களில் இருந்து குறிப்பிட்ட பருவத்தில் நொங்கு கிடைக்கும். காய்கள் கொஞ்சம் முதிர்ந்த பின்னர் சேவாய் என்று சொல்லப்படும், முற்றிய பனங்காயிலிருந்து சதைப் பகுதியை வேகவைத்து உண்ணலாம்.

பழுத்து கனிந்தால் பனம்பழம் கிடைக்கும். பழத்தை உண்டு விட்டு போடும் கொட்டை முளைவிட்டு வளரும். கொட்டைக்குள் உருவாகும் சீப்பை (தவுண்) குழந்தைகள் உண்பதற்கு சுவையாகவும், சத்தானதாகவும் இருக்கும். கொஞ்சநாள்

விட்டால், பனங்கிழங்கு கிடைக்கும் சத்து மிகுதியான இந்த கிழங்கு மனிதனின் வயிற்றுப் புண்ணுக்கு மிகச்சிறந்த மருந்தாகும்.

**அளவில்லா மருத்துவ குணங்கள்**

பனைமரத்தின் பயன்பாட்டை சித்த மருத்துவர்கள் பட்டியலிடுகிறார்கள்.

மனிதரின் உணவுத் தேவைக்கு மட்டுமில்லாமல் வீடுகள் கட்டுவதற்கும் இம்மரங்கள் துணையாக இருந்தன. பனை மரத்திலிருந்து அறுத்து எடுக்கப்படும் பனம்பட்டையை வெயிலில் உலர்த்தி, உரித்து எடுக்கப்படும் நார் கயிறாக பயன்பட்டது.

வீடுகளில் விறகு அடுப்பில் சமையல் செய்த காலங்களில், அடுப்பில் நெருப்பு பற்ற வைக்க, பெண்களுக்கு பனை மரத்தின் பன்னாடையும், காய்ந்த ஓலைகளும் தேவைப்பட்டன. காய்ந்து போன பனம்பட்டைகள், காய்ந்து போன நொங்கு காய்களும் அடுப்பு எரிக்க சிறந்த விறகாகப் பயன்பட்டது. இப்போது நிலைமை மாறிவிட்டது.

பனைமரங்கள் வெட்டி அழிக்கப்படு வதுடன் பனைத்தொழிலாளர்களின் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் ஒருகாலத்தில் பிரதான தொழிலாக இருந்த பனைத்தொழில் இப்போது மெல்லமெல்ல தேய்ந் து கொண்டிருக்கிறது. பனைமரத்தி லிருந்து வெட்டி எடுக்கப்படும் நுங்கு, பதநீர் ஆகியவை சாலையோரங்களில் விற்பனைக்கு கிடைக்கின்றன.

**60 நாள் மட்டும்**

ஆனால், பனங்கொட்டையிலிருந்து கிடைக்கும் தவுண் பெரும்பாலும் விற்பனைக்கு வருவதில்லை. குறிப்பிட்ட பருவத்துக்கு (60 நாள்கள்)

கொட்டைகளை மண்ணில் புதைத்து, பின்னர் அவற்றை வெட்டி எடுத்து பெறப்படும் தவுணை, 25 ஆண்டுகளுக்குமுன்புவரை பலரும் ருசித்து சாப்பிட்டிருப்பார்கள். இப்போதைய தலைமுறையினருக்கு தவுணை குறித்து பெரும்பாலும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

மருத்துவ குணமிக்க இந்த தவுண் திருநெல்வேலி- தென்காசி பிரதான சாலையில் ராமச்சந்திரப்பட்டினம் பகுதியில் தற்போது விற்பனை செய்யப்படுகிறது. பனைஓலையால் உருவாக்கப்பட்ட பட்டையில், 20 துண்டுகள் வரையிலான தவுண் ரூ.40-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இவற்றை குற்றாலம் அருகேயுள்ள மத்தளம்பாறை என்ற இடத்தை சேர்ந்த பனைத்தொழிலாளி மு. ஐயப்பன் (27) தலைமையிலான இளைஞர் குழுவினர் விற்பனை செய்கிறார்கள். இது குறித்து ஐயப்பன் கூறியதாவது:

மத்தளம்பாறை கிராமத்தில் பெரும்பாலானவர்கள் பனைத் தொழிலாளிகள். ஆண்டுதோறும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் இப்பகுதியில் தவுண் விற்பனை செய்கிறோம். இதுபோல், ஜூன், ஜூலை மாதங்களில் குற்றால சீசன் நேரங்களிலும் பழைய குற்றாலம் பகுதியில் ஒரு பட்டை தவுணை ரூ.60-க்கு விற்பனை செய்கிறோம்.

டாக்டர்கள் பலரும் இதை விரும்பி வாங்கி உண்கிறார்கள். மலச்சிக்கல் பிரச்னைக்கு இது அருமருந்தாக இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். உடல் சூட்டை தணிக்கவும், வயிற்று கோளாறுகளுக்கும் தீர்வாக இது இருக்கிறது. நுங்கு விற்பனை செய்யும்போது தவுணையும் கூடவே விற்பனை செய்கிறோம். இதனால், பெரிய அளவுக்கு லாபம் இல்லை. முதலுக்கு மோசமில்லாமல் தவுண் விற்பனை நடக்கிறது என்றார் அவர்